அலகு 11

# தொற்று நோய்கள்



**உற்றபின் அளவும் பிணியளவும் காலமும்**
**கற்றான் கருதிச் செயல்**

**மருத்துவம் கற்றவர், நோயாளியின் உடல்நிலை, நோயின் அளவு, காலம் ஆகியவற்றைக் கருத்திற்கு கொண்டு செயல்படுதல் வேண்டும்..**

## கற்றல் நோக்கங்கள்

இப்பாடத்தைக் கற்றபின் மாணவர்கள் பெறும் திறன்

- தொற்றக்கூடிய நோய்க்குரிய தொழில்நுட்ப வார்த்தைகளை வரையறுத்தல்.
- தொற்று நோயின் வகைகளைப் பட்டியலிடுதல்.
- தொற்று நோய்க்கான மருத்துவ வெளிப்பாட்டை அடையாளம் காணுதல்.
- தொற்றுநோய்களின் சிக்கல்கள் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை புரிந்து கொள்ளுதல்

UPUR78

## முன்னுரை

உயிருள்ள உயிரினங்கள் மற்றும் உயிரற்ற பொருட்களில் இருந்து வரும் தொற்றுக்களை தொற்றுநோய்கள் எனலாம். ஏனெனில் அவைகள் ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கோ அல்லது சில நேரங்களில் விலங்குகளிடமிருந்தோ மனிதர்களுக்கு பரவக்கூடியது. தொற்றுநோய்கள் எல்லா வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் குழந்தைகளுக்கு மிகவும் தீவிரமாகவும் அதிகமாகவும் தாக்கக்கூடியதாகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் தொற்றுநோய் தாக்கம் தடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் நோய்த்தொற்றியியலும் மற்றும் மக்கள் தொகை பெருக்கத்திலும் காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்படும். தேசிய திட்டங்கள் பல தொற்று நோய்களை தடுக்க இருந்தபோதிலும் இதுவரையில் தொற்று நோய்கள் சுகாதார பிரச்சனைகளாகவே உள்ளன.

## 11.1 சொல்லியல் (Terminology)

1. **தொற்று** (infection) : உடலிலோ அல்லது விலங்குகளிலோ தொற்று முகவர் (Infection Agent) உட்புகுந்து மனித உடலிலோ விலங்கு உடலிலோ பெருக்கமடைகிறது.
2. **தூய்மைக்கேடு** (Contamination) : தொற்று முகவர் உடல் மேற்பரப்பிலோ ஆடையிலோ, படுக்கையிலோ, விளையாட்டுப் பொருட்களிலோ, அறுவை சிகிச்சை உபகரணத்திலோ, கட்டுத் துணிகளிலோ, உயிரற்ற பொருட்களான பால், தண்ணீர், உணவு ஆகியவற்றில் தூய்மை கேடுகளை உருவாக்கிறது.
3. **மொய்ப்பு** (Infestation) : ஒரு நபரின் உடலின் மேற்பரப்பிலோ அல்லது உடையிலோ அல்லது விலங்குகளிலோ (கணுக்காலி Arthropods)



Unit_11_Communicable_disease_Gen_Nur.indd 260 09-03-2020 15:52:56

தங்கி, வளர்ச்சியடைந்து, இனப்பெருக்கம் செய்கிறது. (உதாரணம்: பேன் நமைச்சல் பூச்சிகள்)

4. **ஏற்பவர் (Host) பாதிக்கப்படுபவர் :** ஒரு நபரிடமிருந்தோ அல்லது விலங்குகளிடமிருந்தோ (பறவை, கணுக்காலி அடங்கும்) இயற்கையான சூழ்நிலையில் தொற்று நோயாய் கிருமிகளை வாழ்வாதாரத்தின் மூலமாகவோ, உறைவிடம் மூலமாகவோ ஏற்பவர்.

5. **தொற்றுநோய் (Communicable Disease) :** தொற்றுநோய் என்பது குறிப்பிட்ட நோய் தொற்று கிருமிகள் அல்லது நுண்மங்கள் அல்லது நச்சு நுண்மங்கள் மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மனிதனிடமிருந்து மனிதனுக்கோ, விலங்குகளிடமிருந்து விலங்குகளுக்கும் மற்றும் சுற்றுச் சூழலில் இருந்து (மண்) மனிதனுக்கோ அல்லது விலங்குகளுக்கோ பரவக்கூடியது.

6. **கொள்ளைநோய் (Epidemic) :** ஒரு சமூகத்தில் திடீரென நோய் தொற்று ஏற்படுவதோ அல்லது அசாதாரண சூழ்நிலையில் நோய் தொற்று ஏற்படுவதே கொள்ளை நோயாகும்.

7. **ஆண்டு முழுவதும் வரும் நோய்கள் (Endemic) :** ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழ்பவர்களிடதோ அல்லது ஒரு குறிப்பிட்ட குழு மக்களிடத்தோ நோய்த் தொற்றுக் கிருமிகளால் தொடர்ந்து ஏற்படும் நோயாகும்.

8. **அவ்வப்போது வரும் நோய் (Sporadic) (அல்லது) சிறலான நோய் :** பெரிய நிலப்பரப்பில் வசிக்கும் மக்களிடம் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறு குழுக்களாக நோய் தோன்றுவதே.

9. **பெரும்பரப்புத் தொற்றுநோய் (Pandemic) :** உலகிலோ, கண்டங்களிலோ, நாட்டின் ஒரு பகுதியிலோ அல்லது நாடு முழுவதிலும் உள்ள பெருவாரியான மக்களுக்கு வரும் நோயாகும்.

10. **விலங்கியல் நோய்கள் (Zoonosis) :** சாதாரண சூழ்நிலையில் முதுகெலும்பு உள்ள விலங்குகளிடமிருந்து மனிதனுக்கு வரும் நோயாகும். (உதாரணம்: ப்ளேக், ரேபிஸ்)


11. **அழித்தல் (Eradication) :** கண்காணிப்பின் மூலம் நோய்த்தொற்று கிருமிகளை முடக்குதல் ஆகும்.

### கடத்திகள்

கடத்திகள் என்பது நோய்த்தொற்று உருவாக்கக்கூடிய நபரோ அல்லது விலங்குகளோ நோய்த்தொற்று கிருமிகளை அதற்கான அடையாளங்களும் அறிகுறிகளும் இல்லாமல் சாத்தியமான நோய்த்தொற்றை மற்றவர்களுக்கு வழங்கக் கூடியவர்கள்.

## 11.2 நோய்க்கிருமிகளின் வகைகள்

நோய்க்கிருமிகளின் வகைகள்



பாக்டீரியா, வைரஸ், பூஞ்சைகள், ரிக்கட்ஸியா, புரோட்டாடோசோவா, ஒட்டுண்ணிப் புழுக்கள்

பாக்டீரியா – Bacteria

பூஞ்சைகள்– Fungus

ரிக்கட்ஸியா – Rickettsia

வைரஸ் – Virus

புரோட்டாடோசோவா – Protozoa

ஒட்டுண்ணிப் புழுக்கள் – Parasitic Worms

உங்களுக்குத் தெரியுமா?

நோய் கட்டுப்பாட்டு தேசிய மையம் நிறுவனம் (தேசிய நோய் தொற்று நிறுவனம் – NCDC) இந்திய பொது சுகாதார இயக்குனர், சுகாதார மற்றும் குடும்ப நலத் துறையால் 1963–ஆம் ஆண்டு ஜூலை மாதம் நிறுவப்பட்டது.


### வரையறை

**தொற்றுநோய் :** தொற்றுநோய் என்பது குறிப்பிட்ட நோய்த்தொற்று கிருமிகள் அல்லது நச்சுகள் மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மனிதனிடமிருந்து மனிதனுக்கோ விலங்குகளிடமிருந்து விலங்குகளுக்கோ அல்லது சுற்றுச் சூழலில் இருந்து (காற்று, மண், தண்ணீர், உணவு etc.) மனிதனுக்கோ அல்லது விலங்குகளுக்கோ பரவக்கூடியது.

**நோய்த்தொற்று (ரிசா'வாயா') :** பரவும் முறை சந்தேகத்திற்குரிய நோய் ஏற்பவர்

**தொற்றுநோய்குள்ளான நபர் மூலம்** (Source of Reservoir) : தொற்றுநோயை உருவாக்கக்கூடிய ஒரு உயிரினம்.

**நோய்த்தொற்று சங்கிலி :**




நோய் பாதிப்புக்குள்ளான நபர் மூலம் என்பது உயிருள்ள அல்லது உயிரற்ற பொருட்களின் உள்ளேயோ அல்லது அதன் மேற்பரப்பிலோ வளர்ந்தோ, பெருக்கத்தையோ அல்லது அதன் தொடர்ச்சியான வாழ்வின்மூலம் நோய் தொற்றை உருவாக்கி சார்ந்திருப்பதாகும்.

1. **தொற்றுக்குள்ளான நபர் – மனிதன்** (Human Reservoir) :

**நோயாளி** : முக்கிய நோய் உண்டாக்கும் அங்கக உயிரிகளை (Pathogens) மனித உடலில் வாழும் முறைக்கு தகவமைத்துள்ளன. எ.கா. தட்டம்மை (Measles), சின்னம்மை (Chickenpox), டைபாய்டு (Typhoid), மூளைக்காய்ச்சல் (Brain Fever), சிபிலிஸ் (Syphilis), கொனாரியா (Gonorrhoea).

**மனிதனிடம் இருந்து மனிதனுக்கு சுழற்சி மூலம் பரவுகிறது.**

**தொற்றுக்குள்ளான நபர் – கடத்திகள்:** கிருமித்தொற்று உள்ள ஒரு நபர் ஆனால் அடையாளங்களையோ அறிகுறிகளையோ காட்டுவதில்லை.

2. **விலங்கு ரிசர்வாயர்** (Animal Reservoir) : தொற்று நோய்களின் ஆதாரம் விலங்கு மற்றும் பறவையாக இருக்கலாம்.


3. **உயிரற்ற பொருள்கள் :** மண் மற்றும் உயிரற்ற பொருட்கள், பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. இவை கிருமித் தொற்றாக செயல்படலாம். (எ.கா.) இரணஜன்னி மண் மூலம் பரவக்கூடியது.

## 11.3 பரவும் முறை (Mode of Transmission)

தொற்று நோய்கள் மனிதர்களிடமிருந்து மனிதனுக்கு நேரடியாகவோ, மறைமுகமானத் தொடர்பிலோ பரவக்கூடியது. சில வகைகள் வைரஸ்கள் (virus), பாக்டீரியாக்கள் (bacteria), பூஞ்சைகள் (fungi) மற்றும் ஒட்டுண்ணிகள் (Parasites) தொற்று நோய்களை உருவாக்கக் கூடியவை. மலேரியா, தட்டம்மை, சுவாச தொற்று நோய்கள், தொற்று நோய்களுக்கான எடுத்துக்காட்டுகளாகும்.

**சந்தேகத்திற்குரிய நோய்த்தொற்று ஏற்பவர்** (Susceptible Host) :

ஒரு நபர் ஒரு நோய் தொற்றுக்கு எதிர்ப்பு குன்றியவராக இருப்பாராயின் அந்நோய் தொற்றுக்கு உட்படுத்தப்பட்டால் அவர் அந்நோய் தொற்றினால் பாதிக்கப்படுவார்.




1. **நேரடி தொடர்பு** (Direct Contact)

நோய்த்தொற்று தோல் மூலமாகவோ, கோழை மூலமாகவோ, கோழையிலிருந்து தோலுக்கு ஒரு நபருக்கோ அல்லது வேறொரு நபருக்கோ பரவக்கூடியதாகும். (எ.கா.) தோல் மூலம் தொடர்பு – தொடுதல், முத்தமிடுதல், உடலுறவு. நோய்கள் பரவுவது எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்கள், தொழுநோய், கண் மற்றும் தோல் தொற்று நோய்கள்.

2. **நீர்திவலை மூலம் பரவும் தொற்றுநோய்கள்** (Droplet Infection) :

நோய்த் தொற்றுக் கிருமிகளை உமிழ் நீர் துளிகள் மற்றும் நாசி தொண்டை சுரப்பி துளிகளை நேரடியாக தெளிப்பதன் மூலம் பரவக்கூடியது. நோய் தொற்றுக்கான கிருமிகளை இருமல் மற்றும் தும்மலின் போது நீர்த்துளிகள் மூலம் தெளிக்கப்படுகின்றன.

3. **மண் மூலம் தொடர்பு** (Contact with Soil) :

நோய் பாதிப்பை எதிர்க்கும் சக்தி குறைந்த செல்கள் நேரடியாக தொற்று தாக்கத்திற்கு உட்படும்போதும் மண்ணின் மூலமாக, மட்கிய

கழிவு அல்லது அழுகிய காய்கறிகள் மூலமாக நோய் தொற்று பரவும்.

4. **தோல் அல்லது சரும தூண்டல்:**


ரேபிஸ் கிருமிகள் நாய்க்கடியால் உருவாகிறது. மாசுபட்ட ஊசிகள் மற்றும் உறிஞ்சு குழாய்கள் மூலம் மஞ்சள் காமாலை 'பி' நச்சு நுண்மங்கள் பரவுகிறது.

5. **நஞ்சுக்கொடி மூலம் பரவுதல்:**

டார்ச் முகவர்கள் (Torch Agents) டாக்ஸோபிளாஸ்மா காண்டி (Toxoplasma Gondii), ருபெல்லா வைரஸ் (Rubella Virus), சைடோமெகல்லோ வைரஸ் (Cytomegalovirus), ஹெர்ப்ஸ் சிம்ப்லக்ஸ் வைரஸ் (Herpes Simplex Virus), வரிஸில்லா வைரஸ் (Varicella Virus), சிபிலிஸ் (Syphilis), ஹெபாடைடிஸ் 'பீ' (Hepatitis 'B') + மற்றும் எய்ட்ஸ். ஒருசில உயிரற்ற முகவர்கள் (எ.கா.) தாலிடோமைடு (Thalidomide), டைஈதைல்ஸ்டில்பெஸ்ட்ரால் செங்குத்தாக பரவக் கூடியது. இதன் மூலம் (தாயிடமிருந்து குழந்தைக்கு) கரு பாதிக்கப்பட்டு குறைபாடுள்ள சிசுவாக மாறுகிறது.

## 11.4 மறைமுகமாக பரவுதல் (Indirect Transmission)

பலவிதமான வழிமுறைகளை தழுவி பரவக்கூடியதில் 5 'F' ஒன்றாகும். 5 Fs




1. **வாகனம் மூலம் பரவுதல் (Vehicle Borne)**

சில வகை உள்ள நோய்த் தொற்று முகவர்களின் வாகனத்தின் மூலமாக மறைமுக தொடர்பின் மூலம் நோய் தொற்று ஏற்படுகிறது. மனிதனை தொடும் பொழுதோ அல்லது அதை உட்கொள்ளுவதன் மூலமாகவோ ஏற்படுகிறது.

2. **கிருமி கடத்திகள் மூலம் (Vector borne)**

கிருமி கடத்திகள் என்பது ஒரு கணுக்காலிகள் (Arthropods) அல்லது உயிருள்ள கடத்திகள் (Snail). இது சந்தேகத்திற்குரிய நபருக்கு தொற்று நோயை பரப்புகிறது. நோய்த்தொற்று முகவர்களான இப்பூச்சிகள் இரத்தத்தை உறிஞ்சுவதால் பரவுகிறது. இவை கொசுக்கள் மற்றும் உண்ணிகள். இந்தப் பூச்சிகள் நோய்த்தொற்று உள்ளவர்களின் இரத்தத்தை குடிப்பதன் மூலம் நோய் தொற்றை அல்லது தொற்றுநோயை பெறுகிறது. அவற்றில் சில பறவைகள், விலங்குகள், மனிதன். இந்த நோயானது புதிய நோய் தோற்று ஏற்பவரை கடிப்பதன் மூலம் பரவுகிறது. (எ.கா.) மலேரியா, லைம் நோய் இவ்விதமாக பரவுகிறது.

3. **காற்று மூலமாக (Air Borne)**

காற்று மூலம் பரவக்கூடிய அங்கக உயிரிகள் மூலம் (Pathogens) இந்த வகையான நோய்கள் பரவுகிறது. ஒரு சில தொற்றுக்கிருமிகள் நீண்ட தூரத்திற்கு பயணித்து, குறிப்பிட்ட நேரத்திற்கு அதிகமாகவே காற்றில் உயிருடன் கலந்து, நோய்கிருமிகள் நீர்த்துளிகள் மூலம் பரவுவதால் நோய்கள் உருவாகிறது. (எ.கா.) காசநோய், தட்டம்மை, சுவாச நோய் தொற்றுகள், க்யூ காய்ச்சல் (Q fever).

4. **கிருமி தீர்க்கப்படாத பொருட்கள் மூலமாக (Fomite Borne)**

ஆரோக்கியமான மனிதனுக்கு உணவு மற்றும் தண்ணீர் தவிர நோயாளிகளிடம் இருந்து வெளியேறும் நோய்த் தொற்றானது உயிரற்ற பொருட்களின் மூலமாக தொற்றுநோய்களை பரவும் வளர்க்கவும் செய்கிறது. கிருமி தீர்க்கப்படாத பொருட்களின் உள் அடங்குபவை. சில, துணிகள், துண்டுகள், விளையாட்டு பொருட்கள், பாத்திரங்கள், புத்தகம், எழுதுகோல், அறுவை சிகிச்சை உபகரணங்கள் ஆகியவையாகும். கிருமி தீர்க்கப்படாத பொருட்கள் மூலம் பரவும் நோய்கள்: டைபாய்ட், தொண்டை அடைப்பான், தோல்நோய்கள்.

5. **சுத்தப்படுத்தப்படாத கைகள் மற்றும் விரல்கள் (Unclean hands and fingers)**

நோய் தொற்று கிருமிகள் கைகள் வழியாக உணவிற்கும், மூக்கு மற்றும் ஆசனவாய்க்கும், பிற உணவிற்கும் பரவுகிறது.

### நோய் பரவும் சங்கிலி (Chain of Disease Transmission)

நோய் பரவும் சங்கிலியில் ஆறு காரணிகளை உள்ளடக்கியதாக உள்ளது.

## 11.5 தொற்று நோய்களை வகைப்படுத்துதல் (Classification of Communicable Diseases)

தொற்று நோய்களை நோய்த் தொற்றியியலின் படி நோய் தொற்று பரவும் முறைக் கேற்றார் போல வகைப்படுத்தப்படுகிறது.



Unit_11_Communicable_disease_Gen_Nur.indd 263 09-03-2020 15:52:58

- **நீரினால் பரவும் நோய்கள் :** மாசடைந்த தண்ணீரை பருகுவதால் பரவுகிறது.
- **உணவினால் பரவும் நோய்கள் :** மாசடைந்த உணவை உட்கொள்ளுவதால் பரவுகிறது.
- **காற்றினால் பரவும் நோய்கள் :** மாசடைந்த காற்றை சுவாசிப்பதன் மூலம் பரவுகிறது.
- **கிருமி கடத்திகள் மூலம் பரவும் நோய்கள்:** கொசுக்கள் மற்றும் ஈக்களின் மூலம் பரவுகிறது.

## தொற்று நோய்கள்

**வாகனம் மூலம் பரவும் நோய்கள்**

மறைமுக தொடர்பினால் உயிரற்ற பொருட்களை தொடுவதின் மூலமாக இந்த வகையான நோய் பரவுகிறது.

## 11.6 நீரினால் பரவும் நோய்கள் (WATER BORNE DISEASE)

### டைபாய்டு காய்ச்சல் (Typhoid Fever)

#### வரையறை

டைபாய்டு காய்ச்சல் 'சால்மோனெல்லா டைப்பி' என்ற பாக்டீரியாவால் ஏற்படும் ஒரு கடுமையான தொற்றாகும்.

**ஏற்படுத்தும் உயிரினம்**

சால்மோனெல்லா டைப்பி (Salmonella Typhi)

**பரவும் முறை**

டைபாய்டு காய்ச்சல் உள்ள நோயாளி மற்றும் கடத்திகளின் மலம் மற்றும் சிறுநீர் உணவில் கலப்பதால் பரவுகிறது. இவை ஈக்கள் மூலமாக திரும்பவும் நோய்த்தொற்றை உருவாகிறது.

### நோய் கிருமி பெருக்க காலம்

10 முதல் 14 நாட்கள் வரை

#### அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள்

- காய்ச்சல் 103 முதல் 104 °பாரன்ஹீட்
- இருமல் மற்றும் தொண்டை புண்
- கடுமையான மன குழப்பம்
- சோர்வு
- பலவீனம்
- வாந்தி
- எடை இழப்பு
- தலைவலி
- வயிற்று வலி
- கடுமையான வயிற்றுப்போக்கு
- கடுமையான மலச்சிக்கல்
- சருமத்தில் இளஞ்சிவப்பு புள்ளிகள்

டைபாய்டு காய்ச்சலுக்கு இரண்டு அல்லது மூன்று வாரத்திற்கு மேல் சிகிச்சை அளிக்கவில்லையெனில் பாதிக்கப்பட்ட நபர் மனக் குழப்பத்தோடு நிற்க அல்லது நகரமுடியாமல் அபாயகரமான பிரச்சனைகளை சந்திக்க வேண்டியிருக்கும்.

#### பரிசோதனைகள்

வைடால் டெஸ்ட் (Widal Test)

| தண்ணீரினால் பரவும் நோய்கள் | காற்றினால் பரவும் நோய்கள் | நுண்ம கடத்திகள் மூலம் பரவும் நோய்கள் |
|---|---|---|
| 1. டைபாய்டு காய்ச்சல்<br>2. காலரா<br>3. ஹெப்படைட்டிஸ் 'ஏ'<br>4. திடீர் வயிற்றுப்போக்கு<br>5. போலியோ<br>6. உணவு விஷம்<br>7LGKW4 | 1. சின்னம்மை<br>2. தட்டம்மை<br>3. புட்டாலம்மை<br>4. இன்புளுயன்சா<br>5. தொண்டை அடைப்பான்<br>6. கக்குவான் இருமல்<br>7. மெனின்கோகாக்கல் மூளைக்காய்ச்சல்<br>8. கடுமையான சுவாச தொற்று நோய்கள் | 1. டெங்கு காய்ச்சல்<br>2. மலேரியா<br>3. பைலேரியா<br>4. சிக்குன் குனியா<br>5. நீண்டகால சுவாச தொற்று நோய்கள்<br>6. காச நோய்<br>7. பறவை காய்ச்சல் |



Unit_11_Communicable_disease_Gen_Nur.indd 264 09-03-2020 15:52:58

## கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

1. நீர் தேக்கத்தை கட்டுப்படுத்துதல்.
2. சுகாதாரம் மற்றும் சுத்தம்.
3. நோய் தடைகாப்பு வழங்குதல்.

1. **நீர்த் தேக்கத்தை கட்டுப்படுத்துதல் :** வழக்கமான முறையில் அடையாளம் கண்டு அவற்றை கட்டுப்படுத்துதல்.

**ஆரம்பகால பரிசோதனை –** இதை உறுதிப்படுத்த முக்கிய பரிசோதனையாக இரத்தம் மற்றும் மலத்தின் நுண்ணுயிர் ஆய்வு உள்ளது.

**அறிவிப்பு –** சுகாதார அதிகாரிக்கு நோய்த்தொற்று பரவுதலையும், கட்டுப்படுத்துவதையும் பற்றி அறிவுறுத்தப்படுகிறது.

**தனிமைப்படுத்துதல் –** மூன்று பேக்டீரியியல் எதிர்மறை மலம் மற்றும் சிறுநீர் வரும் வரை தனிமைப்படுத்த வேண்டும்.

**சிகிச்சைகள் –** சரியான சிகிச்சையின் மூலம் நோய் தொற்றை கட்டுப்படுத்தவும் பிரச்சனைகளை தடுக்கவும் முடியும்.

**தொற்று நீக்குதல்**

- மூடப்பட்ட கொள்கலனில் சிறுநீர் மற்றும் மலத்தை சேமித்து 5% க்ரிசால் கரைசல் மூலம் குறைந்தது இரண்டு மணிநேரத்திற்கு தொற்று நீக்கம் செய்ய வேண்டும்.
- அனைத்து அழுக்கடைந்த துணிகள் மற்றும் ஆடைகளை 2% குளோரின் கரைசலில் ஊறவைத்து நீராவி மூலம் கிருமி நீக்கம் செய்ய வேண்டும்.
- அனைத்து சுகாதார பணியாளர்கள் தங்கள் கைகளைக் கழுவ வேண்டும்.
- மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு பிறகு சிறுநீர் மற்றும் மலத்தை தொடர்ந்து பரிசோதனை செய்ய வேண்டும்.
- நுண்ணுயிர் கிருமி மற்றும் சீராலாஜிக்கல் (Serological) பரிசோதனைகள் மூலம் கடத்திகளை அடையாளம் காணவேண்டும்.
- கடத்திகள் கண்காணிப்பின் கீழ் இருக்க வேண்டும். அவர்கள் நீர், பால், உணவுகள் கையாளுவதை தடுக்க வேண்டும்.
- உணவு தயாரிப்பதற்கு முன்பும் சிறுநீர், மலம் கழித்த பின்பும் சோப்பு போட்டு கை கழுவுவதற்கு சுகாதாரக் கல்வி அளிக்க வேண்டும்.

2. **சுகாதாரம் மற்றும் தனிசுத்தம்** (SANITATION AND HYGIENE) **:**

- குடிநீர் வழங்குதலை சுத்திகரிக்கவும் பாதுகாக்கவும் வேண்டும்.
- அடிப்படை சுகாதாரத்தை மேம்படுத்தி உணவு சுத்தத்தை ஊக்கப்படுத்த வேண்டும்.

3. **நோய் தடுப்பு (IMMUNIZATION):**

- டைபாய்டு நோயை தடுக்க இரண்டு தடுப்பூசிகள் உள்ளன.
- கொல்லப்பட்ட டைபாய்டு தடுப்பூசி, ஊசி மூலம் கொடுக்கப்படுகிறது.
- உயிருள்ள பலவீனமான தடுப்பூசி வாய் வழியாக கொடுக்கப்படுகிறது.

## சிகிச்சைகள்

நுண்ணுயிர் கொல்லிகள் வழங்கப்பட வேண்டும்

## செவிலிய மேலாண்மை

1. சரியான உடல் வெப்பநிலையை பராமரித்தல்.
2. வசதியான நடவடிக்கைகளை அளித்தல்.
3. மருந்துகளின் பக்க விளைவுகளை பின்பற்ற வேண்டும்.
4. முக்கிய அறிகுறிகளை கண்காணிக்க வேண்டும்.
5. கை கழுவுதல், கையுறை அணிதல், தன் சுத்தம் பற்றி சுகாதார கல்வியின் மூலம் அனைவருக்கும் கட்டாய முன்னெச்சரிக்கைகளை வழங்க வேண்டும்.
6. சிக்கல்களின் அறிகுறியான குடலில் துளை உள்ளதா என்பதை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும்.
7. உட்கொள்ளுவதையும் வெளியேற்றுவதையும் துல்லியமாக பதிவு செய்தல்.
8. சரியான தோல் மற்றும் வாய் பராமரிப்பு வழங்க வேண்டும்.

## சிக்கல்கள்

- குடல் இரத்தப்போக்கு
- மலத்தில் புதிய இரத்தம்
- குடலில் துளை

## காலரா (CHOLERA)

விப்ரியோ காலரே என்ற பாக்டீரியாவில் ஏற்படக்கூடிய கடுமையான வயிற்று போக்காகும்.

ஏற்படுத்தும் உயிரினம் (Causative organism) – விப்ரியோ காலரே

## பரவும் முறை

- மனிதரிடமிருந்து மனிதனுக்கு பரவும் முறை



Unit_11_Communicable_disease_Gen_Nur.indd 265 09-03-2020 15:52:58

உங்களுக்குத் தெரியுமா?

- ரோமாபுரி பேரரசர் அகஸ்டஸ் (2000 ஆண்டிற்கு முன்) டைபாய்டு நோயால் பாதிக்கப்பட்ட போது குளிர் குளியல் செய்து சுகம் பெற்றார். இச்சிகிச்சையை வழங்க ஆண்டனியஸ் மூசா, இச்சிகிச்சையினால் புகழ்பெற்றார்.
- 1659–ஆம் ஆண்டில் தாமஸ் வில்லீஸ் முதன் முதல் டைபாய்டு காய்ச்சலை விளக்கினார்.
- பிரஞ்சு மருத்துவர் பியர் சார்லஸ் அலெக்சாண்டர் லூயிஸ் முதலில் டைபாய்டு என்ற வார்த்தையை முன்மொழிந்தார்.

- அசுத்தமான மலம் கலந்த தண்ணீர்
- அசுத்தமான உணவு மற்றும் தண்ணீர்
- நேரடி தொடர்பு

## நோய் கிருமி பெருக்கு காலம் (Incubation Period)

சில மணித்துளிகள் முதல் 5 மணி நேரம் வரை.

## அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள்

திடீரென தொடங்கி அதிகப்படியான வலி இல்லாமல் அரிசி கலந்த தண்ணீர் போல் ஏற்படும் வயிற்று போக்காகும்.

- தசை பிடிப்பு
- குழந்தைகளுக்கு – காய்ச்சல், வலிப்பு, சுயநினைவின்மை, தசைநார் இழுப்பு.
- வாந்தி
- புதைந்த அல்லது மூழ்கிய கண்கள்
- குழிந்த கன்னங்கள்
- வெளிரிய தோல்
- மெலிந்த குரல் (Husky Voice)
- குளிர்ந்த நிலையிலான கை, கால்கள்.
- விரைவான மற்றும் பலவீனமான நாடித்துடிப்பு.
- இரத்த அழுத்தம் குறைவு
- ஆழமற்ற மற்றும் விரைவான சுவாசம்.

### பரிசோதனைகள்

மலம் பரிசோதனை

### சிக்கல்கள்

- அதிர்ச்சி
- கடுமையான நீரிழப்பு
- இரத்த சர்க்கரையின் அளவு குறைவதால் குழந்தைகளுக்கு வலிப்பு, சுய நினைவு இழத்தல் மற்றும் மரணம் கூட ஏற்படலாம்.
- குறைந்த பொட்டாசியம் அளவு (Hypokalemia).

## கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

### பரிசோதனையை சரிபார்த்தல்

எல்லா நோயாளிகளையும் பரிசோதிக்க வேண்டும்.

**அறிவித்தல்**

1. காலராவால் பாதிக்கப்பட்ட அனைவரையும் பரிசோதித்தல்
2. தேசிய சர்வதேசம் மற்றும் உள்ளூர்களில் அறிவிக்கக்கூடிய நோயாக காலரா உள்ளது.
3. சுகாதாரப் பணியாளர்கள் அனைவருக்கும் நோயை அடையாளம் கண்டு உள்ளூர் சுகாதார அதிகாரியிடம் அறிவிக்க பயிற்சி அளிக்க வேண்டும்.

**ஆரம்ப நிலையில் நோயை கண்டு அறிதல்**

ஒரு (லேசான, மிதமான, கடுமையான) காலரா தொற்றால் பாதிக்கப்பட்ட நபரை தீவிரமான தேடுதல் மூலமாக கண்டறிந்து சமுதாயத்தில் உடனடியாக சிகிச்சை அளிக்க வேண்டும்.

**சிகிச்சை மையங்களை நிறுவுதல்**

காலராவை கட்டுப்படுத்த சிறிதும் காலதாமதமின்றி நேயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும்.

1. **சமுதாயத்தில் சிகிச்சை வசதிகள் எளிதில் அணுக கூடியதாக இருக்க வேண்டும்.**
2. **நீரழப்பு சிகிச்சைகள்**
   - லேசான நீரிழப்புகள் – வீட்டிலேயே வாய் வழியாக திரவங்களை கொடுத்து சிகிச்சை அளிக்க வேண்டும்.
   - கடுமையான நீரழப்பு நோயாளிகளுக்கு அருகில் உள்ள மையத்திலோ அல்லது மருத்துவமனையிலோ நரம்பு திரவங்கள் ஏற்றலாம்.
   - கொள்ளை நோயாகவோ அல்லது அச்சுறுத்தலாகவோ இருக்கும்பொழுது – நடமாடும் மருத்துவ சேவையை நிறுவ வேண்டும்.
3. **நோய்த்தொற்றியியல்** (Epidemiological) – ஆய்வின் மூலம் நோய் பரவும் முறை மற்றும் நோய் தோன்றிய விதத்தையும் அடையாளம் காண முடியும்.

4. **சுகாதார நடவடிக்கைகள் அல்லது சுத்திகரிப்பு நடவடிக்கைகள்**

- **நீர் சுத்திகரிப்பு**
- **மலத்தை அகற்றுதல்** – மலம் அகற்றுதல் வசதிகளை சரியாகப் பயன்படுத்த விழிப்புணர்வு அளித்தல்.

5. **உணவு சுகாதாரம்** – உணவை விற்கும் போது சுகாதாரமான முறைகளை பின்பற்ற வேண்டும். சூடான சமைத்த உணவை உடனே உண்ண வேண்டும். அதை சுகாதாரமாக கையாள சுகாதாரக் கல்வி அளிக்க வேண்டும்.

- **தொற்று நீக்கம்** – பிளீச்சிங் பவுடர் மிகச் சிறந்த தொற்று நீக்கியாக செயல்படுகிறது. துணிகள் மற்றும் தனிப்பட்ட பொருட்களை கிருமி நாசினியால் கிருமி நீக்கம் செய்ய வேண்டும்.
- **உப்புகரைசல் சிகிச்சை** – ஆரம்பத் நிலையிலேயே நோயை கண்டறிந்து சிகிச்சை அளித்து உணவு பாதுகாப்பு சிகிச்சை அளிக்க வேண்டும்.

## சிகிச்சைகள்

1. திரவம் மற்றும் தாது உப்புகளை மாற்றி வழங்குதல் அல்லது அளித்தல்.
2. நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்து.
3. வயிற்று போக்கு எதிர்ப்பு மருந்துகள்.
4. நீரிழப்பு சிகிச்சை – மீண்டும் நீர் ஏற்றும் பானங்கள் மற்றும் இரத்த நாளங்கள் வழியான சிகிச்சை
5. இணைப்பு சிகிச்சைகள் – வாந்தி நின்ற 3 முதல் 4 மணி நேரத்திற்கு பிறகு மீண்டும் நீர் ஏற்றும் பானங்களை கொடுத்து நோய் எதிர்ப்பு மருந்துகளையும் கொடுக்க வேண்டும். குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு மருந்து நோய்த்தொற்றிற்கான சிகிச்சை ஆகும்.
6. தடுப்பூசிகள் மக்களை காலராவிலிருந்து தடுக்கிறது.

## மஞ்சள் காமாலை வகை (Hepatitis 'A')

மஞ்சள் காமாலை வகை "ஏ" கல்லீரலை பாதிக்கும் நோய் தொற்றாகும்.

## ஏற்படுத்து உயிரினம்

மஞ்சள் காமாலை "ஏ" வைரஸ் (Hepatitis A Virus) Entro virus

## பரவும் முறை

மலம் வாய்வழி,மற்றும் நேரடி தொடர்பு மூலம்

நோய் கிருமி பெருக்கு காலம்

14 முதல் 28 நாட்கள்

## அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள்

1. காய்ச்சல்
2. சோர்வு
3. கடுமையான பிசியின்மை, குமட்டல், வாந்தி
4. ஹைப்போகன்ட்ரிக் பகுதியில் வலி
5. கருப்பு நிற சிறுநீர், வெளிர் நிற மலம்

### சிக்கல்கள்

திடீர் கல்லீரல் செயலிழப்பு

## கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

**ரிசர்வாயர் கட்டுப்பாடு**

தொற்றுகிருமிகளின் தேக்கத்தை கட்டுப்படுத்துதல் – முழுமையான ஓய்வு மற்றும் 0.5 சதவீதம் சோடியம் ஹைப்போகுளோரைடு கரைசல் மூலம் மலத்தையும், நுண்மம் தீர்க்கப்படாத பொருட்களையும் தொற்று நீக்கம் செய்ய வேண்டும். இவ்வாறு மூலம் தொற்று நோயை மற்றவர்களுக்கு பரவாமல் தடுக்க முடியும்.

### பரவும் முறைகளை கட்டுப்படுத்துதல்

- உணவு உண்பதற்கு முன்பும், கழிவறையை பயன்படுத்திய பிறகும் கைகளை கழுவ வேண்டும்.
- சுகாதாரமான முறையில் மலத்தை வெளியேற்ற வேண்டும்.
- பொது நீர் விநியோகிக்கும் முன் (Commuity water sulies) மாசு துகள் திரளுதல், வடிகட்டுதல் மற்றும் போதுமான குளோரின் பவுடர் மூலம் சுத்திகரிக்க வேண்டும்.

**சந்தேகத்திற்குரிய வழிகளைக் கட்டுப்படுத்துதல்**

### தடுப்பூசிகள்

மஞ்சள் காமாலை வகை "ஏ" நோய்த் தொற்றிலிருந்து பலவகை பட்ட செயலிழந்த மற்றும் உயிருள்ள தடுப்பூசிகளின் மூலம் நோய் தொற்றினை தடுக்கலாம்.

## சிகிச்சைகள்

1. நோயாளிக்கு போதுமான அளவு ஓய்வு அளிக்க வேண்டும்.


2. மிருதுவான உணவு கொடுக்க வேண்டும்.
3. மது பானங்களை தவிர்க்க வேண்டும்.

## தீடீர் வயிற்றுப் போக்கு நோய்கள் (Acute Diarrheal diseases)

### வரையறை

திடீர் வயிற்றுப்போக்கு என்பது அசாதாரணமாக அடிக்கடி இளகிய தன்மையுடனோ (Semi–Solid) அல்லது திரவம் போன்ற 14 நாட்களுக்குள் குடலிருந்து மலம் கழிப்பது ஆகும். உலக சுகாதார நிறுவனம் (WHO).

எட்டமோபே ஹிஸ்டோலிக்கா




### ஏற்படுத்தும் உயிரினம்

பாக்டீரியா (Bacteria) : எஸ்செர்சியா கோலி, ஷீஹெல்லா, சால்மொனெல்லா மற்றும் பல

### நச்சு கிருமிகள் (Virus):

ரேட்டா வைரஸ், அடினோ வைரஸ் மற்றும் பல

### ஒட்டுண்ணிகள் (Parasites):

எண்டமீபா ஹிஸ்டாலிக்கா, ஜியார்டியா லேம்ப்லின் மற்றும் பல

### பரவும் முறை

1. நேரடி தொடர்பு மலம் மற்றும் வாய் மூலமாக

### நோய் கிருமி பெருக்குகாலம்

மணி நேரம் முதல் ஒரு நாள் வரை

## அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள் (Signs and symptoms)

- புதைந்த கண்கள்
- துரித இதயத்துடிப்பு (மிகை இதயத்துடிப்பு)
- குறை இரத்த அழுத்தம்
- எரிச்சல் மற்றும் அமைதியின்மை
- வெளிரிய தோற்றம்
- விரைவான சுவாசம்
- ஒழுங்காக சிகிச்சை அளிக்காவிடில் திடீரென சுயநினைவிழக்க (Collapse) கூடும்.
- சளி மற்றும் இரத்தம் கலந்த, பச்சை அல்லது மஞ்சள் நிறத்திலான திரவ நிலைத் தன்மையுடன் மலம் கழித்தல்.
- வாந்தி
- காய்ச்சல்
- உலர்ந்த வாய், உலர்ந்த தோல், குறைந்த தோல் டர்கர் (Poor Skin Turgor)

## நோய் கண்டறிதல்

மலம் ஆய்வு

### சிக்கல்கள்

1. தொடர்ந்து வயிற்றுப்போக்கு
2. ஊட்டச்சத்து குறைந்த உணவு
3. வைட்டமின்கள் மற்றும் கனிமங்கள் குறைபாடு
4. இரத்த சர்க்கரை குறைவின் விளைவாக வலிப்பு மற்றும் மூளை சேதமடைதல்
5. தாது உப்புகள் இழப்பு
6. குருதியோட்டம் குறைவினால் வரும் அதிர்ச்சி(Hypovolemic Shock)
7. தீடீர் சிறுநீரக செயலிழப்பு

## கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

பிரத்தியேக தாய்ப்பால் ஊட்டுதலை ஊக்குவித்தல்.

### நோய்த்தடுப்பு

- சுகாதார கழிவறைகள் பயன்படுத்துதல்.
- உணவு மற்றும் தண்ணீரை சுத்தமாக வைத்திருத்தல்.
- சாப்பிடுவதற்கு முன்பும் மலம் கழித்த பின்பும் கைகளை கழுவ வேண்டும்.

## சிகிச்சைகள்

**மீண்டும் நீர் ஏற்றும் பான சிகிச்சைகள்–**

எளிதில் கிடைக்கக் கூடிய பானங்களான அரிசி கஞ்சியினை (அரிசி திரவத்தை) கொடுக்கவும். ஒரு உப்புகரைசல் (ORS) பாக்கெட்டை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து நன்றாக கரையும் வரை சுத்தமான தேக்கரண்டியை கொண்டு கலக்க

வேண்டும். 2 வயது குறைவான குழந்தைக்கு ¼ முதல் ½ கிண்ணம் (Cup) ஒவ்வொரு வயிற்றுப்போக்கின் பொழுதும் கொடுக்க வேண்டும். 2 வயதிற்கு மேல் உள்ள குழந்தைகளுக்கு 100மி.லி முதல் 200மி.லி வரை ஒவ்வொரு வயிற்றுப் போக்கின் பொழுதும் கொடுக்க வேண்டும். இந்த கரைசலை 24 மணி நேரத்திற்குள் உட்கொள்ளுதல் வேண்டும். இந்த கரைசலை சூடு படுத்தவோ, கொதிக்க வைக்கவோ கூடாது.

### பொருத்தமான உணவுகள்

1. இளநீர்
2. அரிசி கஞ்சி
3. பருப்பு தண்ணீர்
4. பிசைந்த வாழைப்பழம்
5. தேநீர்
6. தாய்பால் தொடர்ந்து ஊட்டுதல்


### பொருத்தமான மருந்துகள்

- நோய்த்தொற்று கிருமிகளுக்கேற்ற நோய் எதிர்ப்பு மருந்துகள் கொடுத்தல்.
- காய்ச்சல், வாந்தி அடையாளங்களுக்கு ஏற்ற சிகிச்சை அளித்தல்.
- நுண்ணுயிரியின் நகர்வு தன்மையை குறைக்கும் மருந்துகள் கொடுத்தல்.
- கடுமையான நீரழப்பு நோயாளிக்கு இரத்த நாளங்கள் மூலம் திரவம் அளித்தல்.

## இளம்பிள்ளைவாதம் (Poliomyelities)

இளம்பிள்ளை வாதம் என்பது போலியோ வைரஸினால் ஏற்படும் திடீர் வைரஸ் தொற்று நோயாகும். நச்சு கிருமியால் உருவாகக் கூடிய கடுமையான நச்சு கிருமி நோயாகும். இது ஒரு முடமாக்கும் நோய் ஆகும்.

**போலியோ வைரஸின் அமைப்பு**




## ஏற்படுத்தும் உயிரினம்

மூன்று வகையான போலியோ வைரஸ் (வகை I, II, III)

### பரவும் முறை

மலம் மற்றும் வாய்வழி மூலமாக அல்லது மாசுப்படுத்தப்பட்ட அல்லது தூய்மைகேடு அடைந்த கைகள், உணவு, தண்ணீர் மூலமாக பரவுகிறது.

### நீர்திவலை தொற்றுகள் (Droplet Infection)

கடுமையான நோயாக இருக்கும் போது இருமல் மற்றும் தும்மல் மூலம் பரவுகிறது.

### நோய் கிருமி பெருக்குகாலம்

7 முதல் 21 நாட்கள் அல்லது 3 முதல் 35 நாட்களாக மாறுபடலாம்.

## அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள் (Signs and Symptoms)

1. சுவாசம் – தடுமல் (Coryza), தொண்டைபுண் மற்றும் இருமல்.
2. குடல் – வாந்தி, வயிற்றுப்போக்கு, மலச்சிக்கல், தொடர் காய்ச்சல், தலைவலி, மயக்கம், அமைதியின்மை, எரிச்சல் மற்றும் வியர்வை.
3. வலி – தன்னிச்சையான இயக்கங்கள் மூலம் முதுகு, கழுத்து மற்றும் கை, கால்களை அசைக்கும் போது உடனடியாகத் தோன்றும் வலி.
4. உயர்ந்த பரஸ்பர உணர்வு (Hyperparesthesia)
5. முதுகெலும்பு மற்றும் தண்டுவடம் விரைப்பு
6. நாடி துடிப்பு அதிகரித்தல்
7. அதிக வியர்வை
8. பக்கவாதம்

### சிக்கல்கள்

- இதயதசைபழல் (Myocarditis)
- உயர் இரத்த அழுத்தம்
- நுரையீரல் வீக்கம்
- நிமோனியா
- மன அழுத்தம்

## கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

### சுகாதாரம்

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குதல். சுகாதார முறையில் மலங்களை அகற்றி வீட்டின் சுத்தம்

மற்றும் உணவுகளின் சுத்தத்தை மேம்படுத்துவதன் மூலம் நோய் பரவுவதை குறைக்கலாம். எளிய சுத்தத்தை பராமரிக்கும் நடவடிக்கைகள் சில, உணவு தயாரிப்பதற்கு முன் கை கழுவுதல், சாப்பிடுவற்கு முன்பும், குழந்தைக்கு உணவு கொடுப்பதற்கு முன்பும், மலம் கழித்த பிறகும், மலம் கழித்த குழந்தையை சுத்தம் செய்த பிறகும் மலத்தை வெளியேற்றிய பிறகும் கைகளை கழுவுவதை கட்டாயமாகக் கடைபிடிக்க வேண்டும்.

### சுகாதாரக் கல்வி

சுகாதார பணியாளர்களின் முக்கியமான பணியானது வயிற்றுப்போக்கை தடுப்பதற்கு தாய்ப்பாலூட்டுதல், இணை உணவுகள், சுத்தமான குடிநீர், அதிக படியான தண்ணீர் பயன்படுத்துதல், சுகாதாரமான கழிவறையை பயன்படுத்துதல், இளம் குழந்தைகள் மற்றும் நோயாளியின் நோய்த்தொற்று மலத்தை வெளியேற்றுதல் ஆகிய வழிமுறைகளை சமுதாயத்தில் உள்ள நபர்களுக்கு கற்பித்தலின் மூலம் வயிற்றுப்போக்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பராமரிக்கவும் கையகப்படுத்தவும் முடியும்.

### நோய்த்தடை காப்பு

இரண்டு வகையான தடுப்பூசிகள் பயன்படுத்தப்படுகின்றன. செயலிழந்த தடுப்பூசியை (Salk) ஊசி மூலமும், வாய்வழி போலியோ (Sabin) சொட்டு மருந்து போடப்படுகிறது.

### ஈக்களை கட்டுபடுத்துதல்

மனித மலம் மற்றும் விலங்குகளின் மலத்திற்கு இணையாக அவற்றிலிருந்து உருவாகும். ஈக்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும்.

### சிகிச்சைகள்

1. வலி நிவாரணி மற்றும் மயக்க மருந்துகள், வலியை நீக்கவும், தூக்கத்தை தூண்டவும் கொடுக்கப்படுகிறது.
2. மலச்சிக்கல்களுக்கு –மலமிளக்குகள் (Laxative) கொடுக்கப்பட வேண்டும்.
3. நோய் எதிர்ப்பு மருந்து – சுவாச தொற்று நோய் பிரச்சனைகளை தடுக்க.
4. சுவாசத்தில் பிரச்சனைகள் (Respiratary failure) ஏற்பட்டால், செயற்கை சுவாசத்துடன் சிகிச்சை அளிக்க வேண்டும்.
5. மறு வாழ்வு அளித்தல்

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> போலியோ வரலாறு – இளம்பிள்ளை வாத நோய் நீண்ட வரலாறு உடையது. முதல் எடுத்துக்காட்டு 3000 ஆண்டிற்கு முன்பே உள்ளது. 18–வது நூற்றாண்டின் தொடக்கத்தில் எகிப்திய வம்சத்தில் எகிப்திய கல்வெட்டு நிகழ்வுகளில் பூசாரி ஒருவருக்கு மங்கலான பக்கவாதத்தால் காலில் குறைபாடு ஏற்பட்டுள்ளது. அது பொதுவாக இளம்பிள்ளை வாதம் ஆகும்.

## 11.7 காற்றினால் பரவும் நோய்கள்

### சின்னம்மை (Chicken Pox) வேரிஸெல்லா

சின்னம்மை அல்லது வேரிஸெல்லா என்பது வெர்செல்லா சோஸ்டர் என்ற நச்சு வைரஙஸ மூலம் பரவக் கூடிய திடீர் தொற்று நோயாகும்.

### ஏற்படுத்தும் உயிரினம்

வெர்செல்லா சோஸ்டர் (Varicella Zooster)

### பரவும் முறை

சளித்துகள்கள்

### நோய் கிருமி பெருக்குக் காலம்

- சளித்துகள்கள் மூலம் கிருமி பரவுதல்
- 10 முதல் 21 நாட்கள் வரை.

### அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள்

| முன் தோற்ற நிலை | தோற்ற நிலை |
|---|---|
| காய்ச்சல் | தடிப்புகள், கொத்தாக, அரிக்க கூடிய கொப்புளங்கள் |
| பின்புறம் வலி | முதலில் உடல், பிறகு முகம், கைகள், அக்குள்கள், கால்களில் தோன்ற கூடும். |
| நடுக்கம் | வாய்புற மேற்பரப்பில் தடிப்புகள் |
| உடல் சோர்வு | |

### சிக்கல்கள்


பெரியவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு

- இரத்தப்போக்கு அல்லது இரத்தகசிவு
- நிமோனியா
- மூளைத் தொற்று நோய்கள்.
- சிறுமூளை பகுதி கடுமையாக பாதிக்கப்படுதல்

உடலில் தடிப்புகள் தோன்றினால் 6 நாட்களுக்கு தனிமைப்படுத்த வேண்டும். சளித் தொற்றினால் பாதிக்கப்பட்ட பொருட்களை (துணி மற்றும் பாத்திரங்கள்) தொற்று நீக்கம் செய்ய வேண்டும்.

### தடுப்பு நடவடிக்கைகள்

1. வெர்செல்லா சோஸ்டர் இம்யூனோக்ளோபுலின் வெர்செல்லா சோஸ்டர் இம்யூனோக்ளோபுலின் ஊசியை 72 மணி நேரத்திற்குள் நோய் வெளிபடுத்திய உடனே கொடுப்பதன் மூலமாக சின்னம்மை நோயைத் தடுக்கலாம்.
2. தடுப்பூசி தற்போது உயிருள்ள வெர்செல்லா வைரஸ் தடுப்பூசி பாதுகாப்பாக 12–18 மாதமுள்ள சின்னம்மை வரதா குழந்தைகளுக்கு கொடுக்க பரிந்துரைக்கப்படுகிறது. (மருந்துகள்: காய்ச்சல் எதிர்ப்பு மருந்து மற்றும் எதிர்ப்பு வைரஸ் மருந்துகள்)



## தட்டம்மை (Measels)

### வரையறை

தட்டம்மை என்பது குழந்தை பருவத்தில் மிக்சோ வைரஸ் (Myxo Virus) என்ற நச்சு வரைஸினால் ஏற்படக் கூடிய திடீர் நோய்த் தொற்று ஆகும்.

### ஏற்படுத்தும் உயிரினம்

ஆர்.என்.ஏ பாரா மிக்சோ வைரஸ் (RNA Para Myxo Virus)

### பரவும் முறை

சளித் துகள்கள் மூலம்

### நோய் கிருமி பெருக்கு காலம்

காய்ச்சல் ஆரம்பமாகி வெளிப்படுத்திய 10–வது நாள் மற்றும் 14 நாட்களுக்கு மேலான தடிப்பு தோற்றம் பொதுவாக 7 நாட்கள்.

### அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள் (Signs and Symptoms)

**இவற்றில் மூன்று நிலைகள் உள்ளன.**

### 1. அறிகுறி கொப்புளம் நிலை (Prodromal Stage)

- காய்ச்சல்
- தடுமல் (ஊசிலணய
- தும்மல்
- மூக்கிலிருந்து திரம் வெளியேறுதல் (Nasal disapar)
- இருமல்
- கண்கள் சிவந்திருத்தல்
- கண்ணீர் வடிதல்
- ஒளியைப் பார்த்து பயம்
- வாந்தி
- வயிற்றுப்போக்கு
- சிவப்புத் தளத்தில் கொப்புள புள்ளிகள்

### 2. வெடிப்பு நிலை

- பளபளப்பான சிவப்பு (Dushy Red)
- உப்புக்கல் (Macular) போன்ற நிலை
- வெண் கொப்புளம்
- தடிப்புகள் சங்கமித்து மெலிந்திருக்கும்

### பின் தட்டம்மை நிலை (Post Measles Stage)

1. எடை இழப்பு
2. பலவீனம்
3. வளர்ச்சி பின்னடைவு அல்லது பாதிப்பு (Retardation)
4. எதிர்விணை நுரையீரல் காசநோய்
5. ஊட்டச்சத்து மற்றும் வளர்சிதை மாற்றங்கள்.

### சிக்கல்கள்

- தட்டம்மையுடன் இணைந்த வயிற்றுப்போக்கு.
- நிமோனியா



Unit_11_Communicable_disease_Gen_Nur.indd 271 09-03-2020 15:52:59

- காது நோய் தொற்று (Otitis Media)
- காய்ச்சலினால் வலிப்பு
- மூளை நோய்த்தொற்று
- பான் மூளை நோய் தொற்று

## கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

a) தோல் தடிப்பு உருவான 7 நாட்களுக்கு நோயாயியை தனிமைப்படுத்த வேண்டும்.

b) நோய் வெளியான பின்பு தொடர்புடன் இருந்தவர்களுக்கு இரண்டு நாட்களில் நோய் தடை காப்பு போடவேண்டும். தடுப்பூசி போட முடியாத (Contraindication) நோயாளிகளுக்கு நோய் வெளிப்படுத்திய மூன்று முதல் நான்கு நாட்களில் இம்யூ நோக்ளோபூலின் (Immunoglobulin) போட வேண்டும்.

c) நோய் தோன்றியவுடன் தடுப்பூசி போட்டுக் கொண்டால், ஆண்டு முழுவதும் வரும் இந்நோய் மேலும் பரவுவதைத் தடுக்கலாம்.

## சிகிச்சைகள்

தட்டமைக்கு குறிப்பிட்ட சிகிச்சை கிடையாது. ஆனால் சாதாரணமாக நிலைமைகள் 7 முதல் 10 நாட்களில் பழைய நிலைக்கு திரும்பி வருவர். கீழ்வரும் நடவடிக்கைகள் நோய் தொற்றை கட்டுப்படுத்த முக்கிய காரணிகளாகும்.

- காய்ச்சல் கட்டுப்பாடு மற்றும் வலி நீக்குதல்.
- அதிகப்படியான திரவ வகை உணவு நீர் இழப்பைத் தடுக்கும்.
- குளிரானஅடையாளங்களுக்கு சிகிச்சை அளிப்பது.
- கண்களில் புண்கள் இருப்பின் அவற்றை ஈரப் பஞ்சுகளால் கண்களை பராமரிக்க வேண்டும்.


### தட்டம்மை தடுப்பூசி

தட்டம்மைக்கு செயல்திறன் உள்ள தடுப்பூசி மிகச் சிறந்தது ஆகும். தடுப்பூசியானது உறைந்து காயவைக்கப்பட்ட பொருட்களாக வழங்கப்படுகிறது. 2 முதல் 8 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் இத்தடுப்பூசியை சேமித்து வைக்க வேண்டும். WHO பரிந்துரைப்படி 9வது மாதத்தில் குழந்தைக்கு இத்தடுப்பூசியை கொடுக்கலாம்.

## புட்டாளம்மை (Mumps)

### வரையறை

புட்டாளம்மை என்பது பொதுவாக பனிக்காலத்தில் வரைஸினால் ஏற்படும் திடீர் நோய் தொற்றாகும்.




## ஏற்படுத்தும் உயிரினம்

RNA வைரஸ் ஜீனஸ் ரூபெல்லா (Genus Rubella) குடும்ப வகையை சேர்ந்த பாராமைசோவிரிடே (Paramyxoviridae).

### பரவும் முறைகள்

1. சளி துகள்கள்
2. நோய் தொற்றுடையோருடன் நேரடி தொடர்பு

### நோய் கிருமி பெருக்க காலம்

இரண்டு முதல் மூன்று வார காலமாக பொதுவாக 18 நாட்கள்.

## அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள் (Signs and Symptoms)

வலி மற்றும் வீக்கம் கலந்த ஒன்று அல்லது இரண்டு உமிழ்நீர் சுரப்பியில் (Parotid Gland).

1. காது வலி
2. வாய் திறக்கும் போது வலி மற்றும் விறைப்பு.
3. காய்ச்சல்
4. தலைவலி

### சிக்கல்கள்

- ஆர்கைட்டிஸ் (Orchitis)
- கருப்பை நோய் தொற்று (Ovaritis)
- கணைய நோய் தொற்று (Pancreatitis)
- மூளை நோய் தொற்று (Meningoencephalitis)
- இதயத்தசையழல்
- நரம்பு செரிமானம் (Nerve Deafness) பல மூட்டுகளின் வலி தலையில் நீர்கோர்வை போன்றவை அரிதான சிக்கல்கள்.

## கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

**ஆரம்ப நோய்கண்டறிதல்:**



Unit_11_Communicable_disease_Gen_Nur.indd 272 09-03-2020 15:52:59

சுகாதார அதிகாரிகள் மூலம் நோயாளியை அடையாளம் கண்டு சரியான நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலம் நோயை கட்டுப்படுத்த வேண்டும்.

**தனிமைப்படுத்துதல்:**

நோயாளியின் அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள் தணிந்து தெளிவாகும் வரையில் தனிமைப்படுத்த வேண்டும்.

**தொற்று நீக்கம்:**

உமிழ்நீர், இரத்தம், சிறுநீரில் நோய்த் தொற்றுள்ள வைரஸ் உள்ளது. ஆகையால் நோயாளி பயன்படுத்திய பொருட்களை கிருமி நீக்கம் செய்ய வேண்டும்.

### கண்காணித்தல்:

நோய்த்தொற்று உற்பத்தி பரவும் முறை நோயாளியை அடையாளம் காணுதல், மற்றும் சந்தேகத்திற்குரிய தொடர்பு ஆகியவற்றை கண்காணித்தல் மூலம் மீண்டும் நோய் பரவுவதைத் தடுக்க முடியும்.

## தடுப்பு நடவடிக்கைகள்


தடுப்பூசி: ஒற்றை அளவு (0.5ml) உள்ள உயிருள்ள தடுப்பூசி தற்போது புட்டாளம்மை நோயை மிக சிறந்த முறையில் தடுக்கிறது.

இம்யூனோகுளோபுலின்: குறிப்பிட்ட இம்யுனோகுளோபுலின் பயன்படுத்தலாம். ஆனால் அதன் செயல்பாட்டு நிரூபிக்கப்படவில்லை.

## இன்ஃப்ளுயன்சா (Influenza)

### வரையறை

இன்ஃப்ளுயன்சா வைரஸினாக புலுயன்சா என்பது சுவாசம் மூலம் பரவக்கூடிய கடுமையான நோய்த் தொற்றாகும். இன்புளுயன்சா மிகவும் வேகமாக பரவக் கூடியது.




## ஏற்படுத்தும் உயிரினம்

இன்ஃப்ளுயன்சா வைரஸ் (Influenza Virus) மூன்று வகைகளாகும் அவை ('ஏ', 'பி', 'சி')

### பரவும் முறைகள்

ஒரு நபரின் இருமல் மற்றும் தும்மலின் போதும் சுவாசப் பாதையில் நீர் திவலைகள் மூலம் உள்நுழைந்து இன்ஃப்ளுயன்சா நோய் தொற்று பரவுகிறது.

### நோய் கிருமி பெருக்கு காலம்

18 முதல் 72 மணி நேரமை வரை

## அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள்

1. காய்ச்சல்
2. குளிர்ந்த நிலை
3. வலி
4. இருமல்
5. பொதுவான பலவீனம்
6. சிக்கல்கள்
7. நிமோனியா

## சிகிச்சைகள்

நச்சு கிருமி எதிர்ப்பு மருந்து (Antiviral) நோயின் தீவிரத்தை பொறுத்து மருந்துகளையும் மாற்றிக் கொள்ளலாம். நோய் உருவான 24 மணி நேரத்தில் இருந்து 48 மணி நேரத்தில் சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டும்.

## கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

- கூட்ட நெரிசலான இடங்களை தவிர்க்கவும்
- பொது இடங்களில் நல்ல காற்றோட்டமாக இருக்கவேண்டும்.
- கைக்குட்டை அல்லது துண்டு மூலம் தும்மும் போதும் இருமும் போதும் முகத்தை மூட வேண்டும்.
- இன்ஃப்ளுயன்சா நோயாளியை தனிமைப்படுத்த வேண்டும்.

## தொண்டை அடைப்பான் (Diphtheria)

### வரையறை

தொண்டை அடைப்பான் என்பது புற நச்சு தொண்டை அடைப்பான் பாக்டீரியாவால் ஏற்படக்கூடிய திடீர் நோய் தொற்று ஆகும். இந்த நோயானது முக்கியமாக தொண்டை குரல்வளை



Unit_11_Communicable_disease_Gen_Nur.indd 273 09-03-2020 15:53:00

மூக்கு டான்சில் ஆகிய உறுப்புகளை பாதிக்கிறது. இந்த உறுப்புகளில் எங்கு சாம்பல் நிறமான மெல்லிய சவ்வு உற்பத்தியாகிறதோ அவற்றின் மூலம் காற்றில் பரவுகிறது.

## நோயை ஏற்படுத்தும் உயிரினம்

கார்னிபாக்டீரியம் டிப்தீரியா (Corynebacterium Diphtheria) என்ற புற நச்சு தொண்டை அடைப்பான் பாக்டீரியா.

### பரவும் முறை

- சளித் துகள்கள்
- நோய்த்தொற்றுடைய வெட்டுக் காயங்கள்.
- தொண்டை சுரப்பு நீரால் தொற்று அடைந்த பொருள் அல்லது நாசி.

### நோய் கிருமி பெருக்க காலம்

2 முதல் 6 நாட்கள். சில சமயங்களில் நீண்ட நாட்கள்.

## அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள் (Signs and Symptoms)

அடையாளங்கள் ஆரம்பிக்கும் போது வழக்கமாக படிப்படியாக இருக்கும். மிக பொதுவான அடையாளங்கள்

8. தொண்டை வலி
9. உடல் சோர்வு
10. கழுத்தில் இருக்கும் நிணநீர் வீக்கம்
11. குறைவான காய்ச்சல்
12. ஃபேரிங்கோ டான்ஸில் தொண்டை அடைப்பானில் உள்ள தொண்டைப்புண் மற்றும் விழுங்குவதில் கடினம்.
13. ஆரம்பநிலையில் தொண்டை சிவந்து இருத்தல்.
14. சாம்பல் மற்றும் வெண்மையான நீர்க்கசிவு அல்லது சீழுடன் கூடிய புள்ளிகள்.
15. தொண்டை சவ்வுகளில் நோய்த்தொற்று.
16. உள்நாக்கு (டான்சில்), கழுத்தில் உள்ள நிணநீர் முனைகள், தாடையின் கீழ் உள்ள பகுதி, முன் கழுத்து ஆகிய உறுப்புகளில் பெரிய அளவிலான வீக்கம் இருக்கும். நச்சு டிப்தீரியா பெருக்க நிலையினை எருமை கழுத்து என்று அழைக்கிறோம்.
17. ஜவ்வுகளில் புரையேறுவதால் மூச்சுத்திணறல் ஏற்படலாம்.
18. குரல்வளை தொண்டை அடைப்பானால் கரகரப்பு ஒலியுடன் கூடிய அடைப்பு மற்றும் இறுதியில் மூச்சுத் திணறல் ஏற்படலாம்.
19. சுவாசத்தின் போது கேட்க பொறுக்காத ஒலியின் மூலம் சுவாச பற்றாக்குறை ஏற்படுவதுடன் மரணத்திற்கு வழிவகுக்கும்.

### சிக்கல்கள்

தொண்டை அடைப்பான் நச்சினால் வழிவகுக்கக் கூடியது.

- இதயம் சேதமடைதல் (இதயத்தில் நோய்த்தொற்று – Myocarditis)
- நரம்பு மண்டலம் சேதமடைதல்
- சிறுநீரகம் சேதமடைதல்
- நரம்பியலில் (மூளை நோய் தொற்று)
- நீண்டநேர வலிப்பு
- குழந்தைப்பருவ தசைப்பிடிப்பு (Spasms)

## கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

### 1. நோயாளி மற்றும் கடத்திகள் (Carriers)

**ஆரம்பநிலை கண்டுபிடிப்பு:** கடத்திகைள நுண்ணுயிர் கண்டறியும் முறை மூலம் கண்டுபிடிக்க வேண்டும். தொண்டை மற்றும் மூக்கில் (Swab) உள்ள சளியின் பரிசோதனைக்கு எடுத்து நுண்ம தொகுதி வார்ப்பு ஆய்வின் மூலம் தொண்டை அடைப்பான் கிருமி இருப்பதை பரிசோதிக்க வேண்டும்.

**தனிமைப்படுத்துதல்:** சந்தேகத்திற்குரியவர்கள் மற்றும் கடத்திகளை உடனடியாக தனிமைப்படுத்த வேண்டும். மருத்துவமனையில் குறைந்தது 14 நாட்கள் தனிமைப்படுத்த முனைய வேண்டும். **சிகிச்சை:** தொண்டை அடைப்பான் நோய் சந்தேகத்திற்குரியதாக இருக்கும்போது தொண்டை அடைப்பான் நச்சு எதிர்ப்பு பொருளை (Diphtheria Antitoxin) தாமதிக்காமல் கொடுக்க வேண்டும். தசைகள் மற்றும் இரத்த நாளங்கள் வழியாக 20 ஆயிரம் முதல் ஒரு லட்சம் யூனிட் வரையில் கொடுக்கலாம். நோயின் தீவிரத்தை பொறுத்து அளவு மாறுபடலாம்.

### 2. கடத்திகள்

கடத்திகளுக்கு எரித்ரோமைசின் என்ற வாய்வழி நோய் எதிர்ப்பு மாத்திரையின் மூலம் 10 நாட்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும். இதுவே கடத்திகளுக்கு மிகச்சிறந்த மாத்திரையாகும்.

**தொடர்பு:** தொடர்பு உள்ள நபர்களுக்கு சிறப்பு கவனம் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு



Unit_11_Communicable_disease_Gen_Nur.indd 274 09-03-2020 15:53:00

தொண்டையில் (Swab) எடுக்கும் மாதிரி மூலம் நோய் எதிர்ப்பு நிலையை தீர்மானிக்கிறது. நெருங்கிய தொடர்பில் உள்ளவர்களுக்கு தொடர்ந்து பல வாரங்கள் நுண்ணுயிரியல் கண்காணிப்பு செய்ய வேண்டும்.

**சமூகம்:** செயல்திறனுள்ள தொண்டை அடைப்பான் டாக்சாய்டு தடுப்பூசி மட்டுமே சமூகத்தின் மிகச் சிறந்த கட்டுப்பாடாகும். முன்பு எந்த குழந்தைகளுக்கெல்லாம் நோய் தற்காப்பு ஊசி கொடுக்கவில்லையோ அவர்களுக்கு 500 முதல் 1000 யூனிட் அளவு தொண்டை அடைப்பான் நோய் எதிர்ப்பு (Diphtheria Antitoxin) மருந்தினை இரத்த நாளங்கள் வழியாக கொடுக்க வேண்டும்.

## சிகிச்சைகள்

- நோயின் தீவிரத்திற்கு ஏற்ப தொண்டை அடைப்பான் எதிர்ப்பு மருந்தினை 10 ஆயிரம் முதல் 80 ஆயிரம் யூனிட் வரை உடனடியாக கொடுப்பதே சிறந்த சிகிச்சையாகும்.
- நோய் எதிர்ப்பு மருந்து பெனிசிலின், நோய்த்தொற்றை நீக்கவும் மீண்டும் நச்சுப் பொருள் உற்பத்தியை தடுக்கவும் உதவுகிறது.
- முழுமையான ஓய்வு இதய நோயைத் தடுப்பதற்கு அத்தியாவசியமானது ஆகும்.
- சுவாச அடைப்பு இருந்தால் மூச்சு பெருங்குழாயில் துளை (Tracheotomy) அறுவை சிகிச்சை தேவைப்படலாம்.

## தடுப்பு நடவடிக்கைகள்

- செயல்திறனுள்ள DPT அல்லது தொண்டை அடைப்பான் தடுப்பூசி மூலம் தொண்டை அடைப்பான் நோயை தடுக்க முடியும்.
- தற்போது நடைமுறையில் உள்ள நோய் தடுப்பு அட்டவணையும், குழந்தைகளுக்கு ஆறாவது வாரம் முதல் DPT நோய்த்தடுப்பூசி தொடங்க வேண்டும்.
- DPT நோய் தடுப்பூசி தொண்டை அடைப்பான் நோய் மட்டுமில்லாமல் கக்குவான் இருமல் மற்றும் இரணஜன்னி நோயையும் தடுக்கிறது.
- ஒன்றரை முதல் 2 வயதில் உள்ள குழந்தைகளுக்கு, தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இரணஜன்னிக்கு DPT கூடுதல் (Booster) நோய் தடுப்பூசியை 0.5ml அளவும், 5 முதல் 6 வயதில் (தொண்டை அடைப்பான், இரணஜன்னி) DT நோய் தடுப்பூசியும் போட வேண்டும்.

## கக்குவான் இருமல் (Whooping Cough)

### வரையறை

இது சுவாச பாதையில் பொர்டுசிஸ் பாக்டீரியாவால் ஏற்படக்கூடிய தீவர் நோய் தொற்றாகும். ஒவ்வொரு 3 முதல் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்நோய் தொற்று ஏற்படுகிறது.

## நோயை ஏற்படுத்தும் உயிரினம்

போர்டிடெல்லா பெர்டுசிஸ் (Bordetella Pertussis) என்ற "கக்குவான் இருமல் நுண்மம்" ஆகும்.

### பரவும் முறை

தனிப்பட்ட தொடர்பு மற்றும் சளி துகள்கள் மூலம் பரவுகிறது.

### நோய் கிருமி பெருக்கு காலம்

7 முதல் 14 நாட்கள். மூன்று வாரத்திற்கு மிகை இல்லாமல்.

## அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள் (Signs and Symptoms)

1. **அரம்ப நிலை** (Catarrhal Stage)
2. **இடை நிலை** (Paroxysmal Stage)
3. **ஓய்வு எடுக்கும் நிலை** (Convalescent Stage)

- காய்ச்சல்
- குளிர்
- மூக்கிலிருந்து நீர் போன்ற சுரப்பி வெளியேறுதல்.
- எரிச்சலூட்டும் இருமல் படிப்படியாக 1 முதல் 2 வாரத்திற்கு இடை (Parpxysmal) நிலைக்கு வருகிறது.

### சிக்கல்கள்

1. குடலிறக்கம்
2. மலக் குடல் கீழ்றக்கம்
3. விழி வெண்படலத்திற்கு கீழ் இரத்தக்கசிவு
4. மூளை தொற்றுநோய்
5. நிமோனியா மற்றும் மூச்சு குழாய் விரிவு.

## தடுப்பு நடவடிக்கைகள்

- ஆரம்பநிலை நோய்கண்டறிதல்.
- நோயாளியை தனிமைப்படுத்தி சிகிச்சை அளித்தல்.

- மூக்கு மற்றும் தொண்டையில் இருந்து வரும் வெளியேற்றத்தை தொற்று நீக்கம் செய்வது பொதுவான கோட்பாடுகளின் கட்டுப்பாடாகும்.
- மூக்கு மற்றும் தொண்டை சுரப்பிகளின் நுண்ணுயிரியல் பரிசோதனையின் மூலம் மட்டுமே ஆரம்பநிலைதடுப்புநடவடிக்கைகளின் சாத்தியமாக உள்ளது.

## சிகிச்சைகள்

### செயல்திறனுள்ள நோய் தடைகாப்பு:

தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இரணஜன்னி–க்கு DPT போன்ற நோய்த் தடுப்பூசி மூலம் கக்குவான் இருமலுக்கு நோய் தடை பாதுகாப்பு கொடுப்பது நடைமுறையில் செயல்படுத்தப்படுகிறது.

இது நோய்தடுப்பு எதிர்ப்பு மருந்து மூலம் சிகிச்சை அளிக்கலாம். வழக்கமாக எரித்ரோமைசின் நோய் எதிர்ப்பு மாத்திரைகள் இரண்டு வாரத்திற்கு கொடுக்கப்படுகிறது.

## மூளைக்காய்ச்சல் (Meningococcal Meningitis)

### வரையறை

மூளைக்காய்ச்சல் (மெனின்கோ கோக்கல்) என்பது நைசீரியா (Neisseria) என்ற நோய் கிருமியினால் ஏற்படக் கூடிய தொற்று நோயாகும். இதில் வழக்கமாக தலைவலி வாந்தி, விறைப்பு கழுத்து, பகுதியில் விறைப்பு போன்றவற்றில் தொடங்கி படிப்படியாக சில மணி நேரத்தில் சுயநினைவை இழக்க கூடும்.

## நோயை ஏற்படுத்தும் உயிரினம்

நைசீரியா (Neisseria) என்ற கிருமி

### நோய் கிருமி பெருக்கு காலம்

2 முதல் 10 நாட்கள் வரை

## அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள் (Signs and Symptoms)

1. தலைவலி
2. காய்ச்சல்
3. குமட்டல் / வாந்தி
4. வெளிச்ச பயம் / ஒளி பயம் (Photophobia)
5. நரம்பு மண்டல அறிகுறிகள் (கழுத்து விறைப்பு நோயின் தன்மைக்கேற்ப வேறுபடும்).

### சிக்கல்கள் (Complications)

- பரவலாக இரத்தநாளங்களின் உட்புறச் சுவரில் இரத்தம் உறைந்து பின்பு அதிக இரத்தப்போக்கு ஏற்படும் (DIC, இரத்தம் உறைதலின் கோளாறுகள்).
- மூளைக்காய்ச்சல்
- தொடர்ந்து காய்ச்சல்
- வலிப்பு
- மூளை பாதிப்பு
- நடத்தை மற்றும் ஆளுமை மாற்றம்
- பார்வை இழப்பு (பகுதி அல்லது முழுமையாக)
- பெருமூளை வாதம்
- கேட்கும் திறன் இழப்பு
- கற்றல் குறைபாடுகள் மற்றும் மனவளர்ச்சி குறைபாடு
- பக்கவாதம் மற்றும் பேச்சு இழப்பு (பகுதி அல்லது முழுமையான)
- கடுமையான பாக்டீரியா மூளைக்காய்ச்சலால், தலை மற்றும் கால் பின் புறமாக வளைந்து உடல் முன்புறம் வில் போன்று வளையக் கூடும். இதற்கு ஓப்பிஸ்தோடோனஸ் (Opisthotonus) என்று அழைக்கப்படுகிறது.
- சுயநினைவின்மை மற்றும் மரணம்.

## கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

**நோயாளி கடத்திகளின்**

தொடர்புகளை கட்டுப்படுத்தவும்.

**நோயாளி:**

நோய் ஆரம்பித்த இரண்டு நாட்களுக்குள் நோய் எதிர்ப்பு மருந்து சிகிச்சை கொடுத்தால் 95 சதவீத நோயாளிகளின் உயிரைக் காப்பாற்ற முடியும். பென்சிலின் மாத்திரை இதற்கு சிறந்த தேர்வாகும்.

**தொடர்பு:** (Contact)

உறுதிசெய்யப்பட்ட மூளைக்காய்ச்சல் நோயாளிகளுடன் நெருங்கிய தொடர்பில் இருக்கும் நபர்களுக்கு மூளைக்காய்ச்சல் நோய் வருவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

**பெரிய அளவிலான, மருந்தியல் தற்காப்பு :** (chemo prophylaxsis)

பெரிய அளவிலான (மாத்திரைகள்) மருந்துகள் வழங்கப்படும் மக்களில் சிலர் இந்நோயினால் பாதிக்கப்பட்டிருக்கமாட்டார்கள். பெரிய அளவிலான வேதியியல் தற்காப்பு கட்டுப்படுத்த கூடியதும்,



Unit_11_Communicable_disease_Gen_Nur.indd 276 09-03-2020 15:53:00

மருத்துவ முறையில் தொடர்ந்து கண்காணிக்க கூடியதுமாகும்.

**சமூகம்**

மூளைக்காய்ச்சல் நோய் மற்றும் அதற்கான கடத்திகளின் விகிதத்தை பலவகையான சிகிச்சைகளின் மூலம் உடனடியாக குறைத்து கண்காணிக்க வேண்டும்.

**சுற்றுச்சூழல் நடவடிக்கைகள்**


நீண்டகால கட்டுப்பாட்டு நடவடிக்கைகளான வீட்டின் சுத்தத்தை மேம்படுத்தி, கூட்ட நெரிசலை தடுப்பது.

## கடுமையான சுவாச தொற்று நோய்கள் (Acute Respiratory infections)

### வரையறை

கடுமையான சுவாச தொற்று நோய் என்பது சுவாசப் பாதையில் மூக்கு முதல் நுண் காற்றறைகள் (Alveoli) வரை எந்த இடத்திலும் இவ்அழற்சி (Inflammation) ஏற்படலாம்

**சார்ஸ் கோரோனா வைரஸின் திட்ட வரைபடம்**




### நோயை ஏற்படுத்தும் உயிரினம்

எஸ்.ஏ.ஆர்.எஸ் (SARS)கொரானா நச்சு கிருமி (corona virus).

### பரவும் முறை

காற்று மூலம் பரவுகிறது

### நோய் கிருமி பெருக்கு காலம்

18 முதல் 72 மணி நேரத்தில்

### அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள் (Signs and Symptoms)

மூக்கில் நீர் வடிதல், இருமல், தொண்டை புண், மூச்சு விடுவதில் சிரமம், காது பிரச்சனை, பொதுவாக காய்ச்சல், கடுமையான சுவாச நோய் தொற்றுப் பிரச்சனை, பெரும்பாலான குழந்தைகளுக்கு சாதாரண நோய்த்தொற்று சமயத்தில் சளி மற்றும் இருமல் இருக்கும்.


### சிக்கல்கள் (Complications)

நிமோனியா – அதிக அளவிலான நோய் மற்றும் இறப்பிற்கு காரணமாக கடுமையான சுவாச நோய் தொற்றாக நிமோனியா உள்ளது.

### ஹீமோபிலிஸ் இன்புளுயன்ஸா (Haemophilus influenza)

ஹீமோபிலிஸ் இன்புளுயன்ஸா 'பி வகை' கிருமி குழந்தைகளுக்கு 'நிமோனியா' ஏற்பட முக்கிய காரணமாக உள்ளது.

## தீவிர கடுமையான சுவாச கோளாறுகள்




### வரையறை

தீவிர கடுமையான சுவாசக் கோளாறு என்பது ஒட்டிப் பரவும் நச்சு கிருமி நோய்த் தொற்றாகும்.

### நோயை ஏற்படுத்தும் உயிரினம்

கொரோனா நச்சு கிருமி.

### பரவும் முறை

1. நோய் தொற்று பாதிக்கப்பட்ட நபருடன் நெருங்கிய தொடர்பு
2. மாசுபட்ட காற்று மற்றும் சுற்று சூழல் மேற்பரப்புகள்.

3. மாசுபட்ட சுற்றுசூழல் அல்லது பொருட்களின் மேற்பரப்பை தொட்ட நபர் அதன் பிறகு தன் கண் மற்றும் வாய் மூக்கை தொடுவதால் பரவுகிறது..

### நோய் கிருமி பெருக்கு காலம்

18 முதல் 72 மணி நேரத்தில்

### அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள் (Signs and Symptoms)

1. காய்ச்சல்
2. உடல் சோர்வு
3. குளிர்
4. தலைவலி
5. தசை வலி
6. தலைசுற்றல்
7. இருமல்
8. தொண்டை வலி
9. மூக்கில் நீர் வெளியேற்றம்
10. கடுமையான சுவாச கோளாறு

### சிக்கல்கள்

- நிமோனியா
- சுவாச பிரச்சனைகள்
- விரைவீக்கம் (Orchitis)

### கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

1. கை சுத்தம் சுத்தம் செய்ய வேண்டும்.
2. நீங்கள் தொடுகின்ற மேற்பரப்புகளில் தொடுக்கின்றோம் என்பதில் கவனம் செலுத்துங்கள்.
3. நோய்த்தொற்று உள்ள நபர் இருமல் மற்றும் தும்மலின் போது வாயை மூட வேண்டும்.
4. முகத்திரையை பயன்படுத்த வேண்டும்.
5. கையுறைகளை பயன்படுத்தவேண்டும்.
6. சிகிச்சைகள்
7. எஸ்.ஏ.ஆர்.எஸ்–க்கு (SARS) எந்தவித குறிப்பிட்ட சிகிச்சையும் கிடையாது. நோய் எதிர்ப்பு பொருள் பயன்படுத்துவதால் மருத்துவ ரீதியிலான முன்னேற்றம் இருக்காது.

## காசநோய் (Tuberculosis)

### வரையறை

காச நோய் என்பது டியூபர்கிள் (Tubercle) கிருமி மூலம் ஏற்படும் தீவிர நோய் தொற்று ஆகும். இது முதலில் நுரையீரலை பாதித்து நுரையீரல் காச நோயை உருவாக்குகிறது. இது குடல், மூளையுறை எலும்பு மற்றும் மூட்டுகள், நிணநீர் சுரப்பிகள் தோல் மற்றும் திசுக்களை பாதிக்கும். இந்நோய் விலங்குகளையும் பாதிக்கும். இதற்கு பொவைன் காசநோய் (Bovine Tuberculosis) என்று பெயர்.

### நோய் ஏற்படுத்தும் கிருமி

மைக்கோபாக்டீரியம் டியூபர்கிள் (Mycobacterium Tubercle).

### பரவும் முறை

காசநோய் முக்கியமாக நோயுற்றவரிடமிருந்து சளி துகள்கள் மூலம் மற்றவர்களுக்கு பரவுகிறது.

### மற்ற வழிகள்

நோயுற்ற தூசிகளை உள்ளிழுக்கப்படுவதால் நுரையீரல் காச நோய் ஏற்படுகிறது.

### நோய் கிருமி பெருக்கு காலம்

இது வாரங்கள் முதல் மாதங்கள் வரை ஏற்பவர் மற்றும் ஒட்டுண்ணயின் உறவிற்கு ஏற்பவும் நோய்த் தொற்றின் அளவை பொருத்தும் மாறுபடும்.

### அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள் (Signs and Symptoms)

1. நாள்பட்ட இருமல்
2. தொடர்ச்சியான தரம் குறைந்த காய்ச்சல்
3. நெஞ்சு வலி / மார்பு வலி
4. சுவாசக் குழாயிலிருந்து தும்மலின் போது இரத்தம் வெளியேறுதல்
5. உடல் எடை இழப்பு

### சிக்கல்கள்

- சுவாசக் குழாயிலிருந்து தும்மலின் போது இரத்தம் வெளியேறுதல்.
- மீள முடியாத நுரையீரல் அழற்சி.(Pleurisy)
- புளுரா என்ற நுரையீரல் உறையச்சுற்றி நீர்க்கோர்வை (Plencal Effusion)
- நுரையீரல் மற்றும் நுரையீரல் உறையில் சீழ் சேர்தல் (Empyema).
- நுரையீரல் அழற்சி (Pneumothorax).
- அஸ்பொஜிகிளோமா (Aspergilloma)
- மூச்சுக்குழாய் உட்புற அழற்சி (Endobronchitis)
- மூச்சுக்குழாய் நோய் தொற்று.



Unit_11_Communicable_disease_Gen_Nur.indd 278 09-03-2020 15:53:00

- குரல்வளை நோய் தொற்று
- மூச்சுக் குழாய் விரிவடைதல்.

## கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

1. ஆரம்ப காலத்தில் நோயாளியை கண்டுபிடித்தல்
2. பல வகையான மருந்துகள் மூலம் சிகிச்சை
3. காசநோய் தடுப்பூசி (BCG Vaccine)
4. சுகாதாரக் கல்வி

### ஆரம்ப காலத்தில் நோயாளியை கண்டறிதல்

**நோயாளி – சமூகத்தில் உள்ள காசநோய் கட்டுபாட்டு நிறுவனத்தின முதல் படி ஆரம்ப நிலையில் நோய் கண்டறிதல் ஆகும். உலக சுகாதார நிறுவனம் (WHO) வரையறை என்பது யாருடைய சளியில் டியூபர்கிள் கிருமி உள்ளதோ அவர்களுக்கு நுரையீரல் காசநோய் உள்ளது என்பதாகும்.**

**நோயாளியை கண்டறியும் கருவிகள்:** நேரடி நுண்ணோக்கி மூலம் சளி பரிசோதனையின் போது டியூபர்கிள் கிருமி இருந்தால் அவர்கள் காசநோய் நோயாளியாக கண்டறியப்படுவார்கள். உலகில் உள்ள காச நோயாளியை கண்டறிவதில் "சளிப்பரிசோதனை" மலிவான மற்றும் நம்பகத்தன்மை உள்ள நோய் கண்டறிதலாகும்.

### சுகாதாரக் கல்வி

சுகாதாரக் கல்வி திட்டத்தின் நோயாளியை தொடர்ச்சியான சிகிச்சைக்கு செல்லவும். அதனை தொடர்ந்து பின் பற்றவும் சளியை வெளியேற்றுதல் திட்டத்தை நடத்துவதற்கு நிறுவனத்துடன் ஒத்துழைப்பு கொடுக்கவும் ஊக்குவிக்க வேண்டும்.

## சிகிச்சை

காசநோய் எதிர்ப்பு மருந்துகள்

## பன்றிக்காய்ச்சல் (SWINE FLU)

### வரையறை

பன்றி காய்ச்சல் என்பது இன்புளுயன்சா கிருமினால் ஏற்படுகிறது.

## நோய் ஏற்படுத்தும் உயிரினம்

இன்புளுயன்சா நச்சு கிருமி உட்பிரிவுகள் H1N1, H1N2, H3N1, H3N2

### பரவும் முறைகள்

இன்புளுயன்சா நச்சு கிருமி நேரடியாக பன்றியிலிருந்து மனிதனுக்கு பரவுகிறது.

### நோய் கிருமி பெருக்கு காலம்

7 நாட்களுக்குள்

## அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள் (Signs and Symptoms)

1. காய்ச்சல்
2. தொண்டைபுண்
3. இருமல்
4. உடல் வலி
5. பெரும் சோர்வு
6. குமட்டல்
7. குளிர்ந்த நிலை
8. தலைவலி
9. மூச்சு திணறல்

## கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

- போதுமான அளவு தூக்கம் மற்றும் சத்துணவு அளித்தல்.
- மல்டி வைட்டமின், வைட்டமின் சி நிறைந்த மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.
- சோப்பு மற்றும் நீர் கொண்டு கைகளை தவறாமல் கழுவ வேண்டும்.
- நோய்வாய்ப்பட்ட நபரிடமிருந்து விலகி இருக்கவும், நேரடித் தொடர்பை தவிர்க்க வேண்டும்.
- பானங்கள் மற்றும் பாத்திரங்களை பகிர்வதை தவிர்க்க வேண்டும்.
- நோயுற்றவரின் முகத்தை தொடுவதை தவிர்க்கவும்.
- மருத்துவரின் வழிகாட்டுதல் படி முகத்திரையை அணிய வேண்டும்.
- நோயின் நிலை கண்டறியப்பட்ட பகுதிகளுக்கு பயணம் செய்ய வேண்டாம் என அறிவுறுத்த வேண்டும்.
- இறைச்சி ஆய்வு
- சுகாதாரக் கல்வி
- போதுமான கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றம்.
- ஆரம்ப கால நோய் கண்டறிதல் மற்றும் ஆரம்ப கால சிகிச்சை



Unit_11_Communicable_disease_Gen_Nur.indd 279 09-03-2020 15:53:01


- மாட்டிறைச்சி மற்றும் பன்றி இறைச்சையை சரியாக சமைப்பதன் மூலம் நோய் பரவுவதை தடுக்கலாம். இதுவே மிகச் சிறந்த உணவு முறை நோய் தடுப்பு ஆகும்.

### சிகிச்சைகள்

- "தடுப்பூசி" நோய்த்தொற்றுக்கு எதிரான பாதுகாப்பு ஆகும்.
- நோயை தடுப்பதற்கும், சிகிச்சைகளுக்கும் நச்சு நுண்ம எதிர்ப்பு பொருள் மருந்துகள் பயன்படுத்தப்படுகிறது.

## 11.8 கணுக்காலிகள் (Arthropods) மூலம் பரவும்நோய்கள்

### டெங்கு காய்ச்சல் (Dengue Fever)




கொசுக்கள் மூலம் பரவும் பலவீனமான நச்சு நோயாகும். இதனால் காய்ச்சல் மற்றும் கடுமையான மூட்டுவலி திடீரென ஏற்படும்.

தீவிர வகையான டெங்கு காய்ச்சல் டெங்கு இரத்தக் கசிவு அல்லது இரத்தப்போக்கு எனப்படுகிறது. இதில் தீவிர இரத்தக்கசிவு ஏற்பட்டால் திடீரென இரத்த அழுத்தம் (Slow) குறைந்து மரணம் ஏற்படலாம்.

### நோய் ஏற்படுத்தும் உயிரினம்

நோய் முகவராக டெங்கு நச்சு கிருமி உள்ளது.

### பரவும் முறை

டெங்கு காய்ச்சல், ஏடிஸ் எஜிப்ட்பி ( Aedes aegyti ) என்ற பெண் வகை கொசுக்கள் மனிதனை கடிப்பதால் பரவுகிறது.

### நோய் கிருமி பெருக்கு காலம்

3 முதல் 14 நாட்கள் – வழக்கமாக 4 முதல் 7 நாட்கள்

### அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள் (Signs and Symptoms)

1. டெங்கு இரத்தக்கசிவு காய்ச்சல்
2. எல்லாவித டெங்கு வைரஸ் காய்ச்சல் அடையாளம்
3. வெண்கொப்புளம்
4. நோயின் 3–வது நாளில் தோலில் சிவப்பு நிற புள்ளிகள் தோன்றுதல் (Petechial Rash)
5. தலைவலி
6. குமட்டல், வாந்தி
7. காபி நிற வாந்தி
8. வயிற்று வலி
9. அடித் தொண்டை அழற்சி
10. இருமல், செரிமானமின்மை

### டெங்குவின் பலமான கோளாறுகள் (Dengue Shock Syndrome)

- மேலே குறிப்பிட்ட அனைத்து அடையாளங்களுடன் மற்றும் அறிகுறிகளுடன் நோயாளி பலமான கோளாறுக்கு செல்லுதல்.
- திடீர் சரிவு (Sudden Collapse)
- குளிரான கை மற்றும் கால்கள்
- பலவீனமான நாடித்துடிப்பு
- வயைச் சுற்றிலும் நீல நிறத்துத் தோற்றத்துடன் இரத்தப்போக்கு அறிகுறிகள்
- எப்போதாவது மூக்கில் இரத்தப்போக்கு (Epistaxis), வாந்தியில் இரத்தக் கசிவு (Haematemesis) மலத்தில் இரத்தப் போக்கு முளையில் (Melena) இரத்தப் போக்கு. (சப்அரக்கனாய்டு)

### கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

- **கொசு கட்டுப்பாடு**

1. அனைத்து தண்ணீர் பாத்திரங்களையும் மூடவேண்டும்.
2. பூந்தொட்டிகளை ஒவ்வொரு வாரமும் தண்ணீர் மாற்ற வேண்டும்.
3. வீட்டைச் சுற்றியுள்ள பகுதியை சுத்தம் செய்யவும்.
4. வீட்டிலுள்ள வளர்ந்த கொசுக்களை கொல்வதற்கு பூச்சு மருந்துகளை தெளிக்க வேண்டும்.



Unit_11_Communicable_disease_Gen_Nur.indd 280 09-03-2020 15:53:01

### தடுப்பூசி

திருப்திகரமான நோய்தடுப்பூசி இதுவரை கிடையாது. நோய்த்தடைக்காப்பு (Immunization) மூலம் நோயை தடுக்க உடனடியான வாய்ப்பும் இல்லை.

## பிற நடவடிக்கைகள்

- ஓய்வின் போது கொசு ஒழிப்பதற்கான நடவடிக்கையில் இறங்க வேண்டும்.(எ.கா) கொசு வலையிடுதல்
- முழுகை மற்றும் முழுமையான உடை அணிய வேண்டும்.
- கொசு விரட்டும் திரவியங்கள், கீரீம்கள், சுருள்கள், பாய்களை பயன்படுத்த வேண்டும்.
- கைக்குழந்தைகள், குழந்தைகள் பகல் நேரத்தில் தூங்கும் போது கொசுக்களிடமிருந்து பாதுகாக்க படுக்கை வலைகளை பயன்படுத்தவேண்டும்.

## சிகிச்சைகள்

- கடுமையான காய்ச்சல் நேரத்தில் கட்டாயப் படுக்கை ஓய்வு அறிவுறுத்தப்படுகிறது.
- காய்ச்சல் எதிர்ப்பு மருந்துகள் (Antipyretics) மற்றும் துடைத்தல் முறைகள் மூலம் உடல் வெப்பநிலை 98.6°F–ல் வைக்க தேவைப்படுகிறது.
- வாய் வழி திரவங்கள் மற்றும் தாது உப்புகள் சிகிச்சை அதிக வியர்வை, வாந்தி, வயிற்றுப்போக்கு உள்ள நோயாளிகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறது.
- அதிக வலி உள்ளவர்களுக்கு வலி நிவாரணி மற்றும் மயக்க மருந்து தேவைப்படுகிறது.
- நீரழப்பை தடுக்க வீட்டில் கிடைக்க கூடிய திரவங்களை கொடுக்கலாம்.
- இரத்தக் கசிவு நேரத்தில் குறைந்த தொகுதியுடைய இரத்த நாள திரவங்கள் மூலம் சீரான பயனுள்ள இரத்த ஓட்டத்தை பராமரிக்க வேண்டும்.

### பலமான மோதுதல் மேலாண்மை

உடனடியான இரத்த தட்டுகள் இழப்பிற்கு நடுநிலை உப்பு கரைசலுக்கு பதிலாக கொடுக்கப்படுகிறது.

## மலேரியா (Malaria)

மலேரியா என்பது ஜீனஸ்பிளாஸ்மோடியம் வைரஸ் (Genus PlasmodiumVivax) என்ற ஒட்டுண்ணியால் ஏற்படக் கூடிய ஒட்டுண்ணி (Palasire) என்ற நோயாகும்.

## நோய் ஏற்படுத்தும் உயிரினம்

பெண் அனோபிளஸ் வைவாக்ஸ் கொசு (Female Anopheles Vivax Mosquito)

### பரவும் முறை

நோயுற்ற பெண் அனோபிளஸ் வைவாக்ஸ் கொசு கடிப்பதன் மூலம் பரவுகிறது.

### நோய் கிருமி பெருக்கு காலம்

சில நேரங்களில் நோய் கிருமி பெருக்கு காலம் 6 முதல் 9 மாதமாக நீடிக்கலாம்.

**மலேரியா காய்ச்சல் 3 நிலைகளில் உள்ளது**

1. குளிர்ந்த நிலை (15 நிமிடம் முதல் 30 நிமிடம் வரை) – தலைவலி, விரைவான குளிர் காய்ச்சல்
2. சூடான நிலை (30 நிமிடம் முதல் 5 மணி நேரம்) மிக வெப்பமான உணர்வு, தீவிர தலைவலி, சருமம் சுத்தமாக்கப்படும் காய்ச்சல் குறைய ஆரம்பிக்கும்.
3. வியர்வை நிலை – அதிகபடியான வியர்வை, சரியான உடல் வெப்பநிலை, மண்ணீரல் விரிவாக்கம், இரண்டாம் இரத்த சோகை.

### நோய் கண்டறிதல்

இரத்தப் பூச்சு ஆய்வு (Blood Smear Test)

## சிகிச்சை

மலேரியா நோய் எதிர்ப்பு மருந்துகள்.

## யானைக்கால் நோய் (Elephantiasis)

### வரையறை

நிணநீர் யானைக்கால் நோய் பொதுவாக யானைக்கால் நோய் எனப்படும். இது பைலேரியல் (Filarial) என்ற ஒட்டுண்ணி கொசுவால் ஏற்படும் நோய் ஆகும்.

## நோய் ஏற்படுத்தும் உயிரினம்

வுச்சேரியா பன்கிரேப்டி (Wuchereria Bancrofti), ஃபுரூஜியா மலாயி (Brugia Malayi) என்ற பாக்டீரியாக்கள்.

## பரவும் முறைகள்

- இது கியூலக்ஸ் (Culex Mosquito) கொசுக்கடியால் பரவுகிறது.
- நோய் கிருமி பெருக்கு காலம்
- ஐந்து முதல் பத்து மாதங்கள் வரை
- அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள் (Signs and Symptoms)
- காய்ச்சல்
- நிணநீர் நோய்த்தொற்று
- யானைக்கால் போன்ற கை கால்கள்.

## கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

**ஒட்டுண்ணிகளை கட்டுப்படுத்தல்.**

- லார்வல் நிலையில் உள்ள கொசுவினை ஒழிக்க நடவடிக்கை.
- இரசாயன கட்டுப்பாடு (கொசு முட்டை கிருமிநாசினி)
- குளத்தில் உள்ள பிஸ்டியா தாவரத்தினை அழித்து, குளத்தில் மீன்களையும் தாமரையையும் வளர்த்தல்
- கொசு லார்வாவினை அழிப்பதுடன் சில பொறியியல் சார் நடவடிக்கைகளை மேற்கொண்டால் நலம் பயக்கும். அவையாவன சாக்கடையை மூடுதல், தேங்கிய நீரை அகற்றுதல், கழிவுநீர் தொட்டியை பராமரித்தல் மிதக்கும் தொட்டியை பராமரித்தல்.

## நோய்கண்டறிதல்

நுண்ணோக்கி பரிசோதனையில் மூலம் இரத்த பூச்சி ஆய்வு (blood smear).

## சிகிச்சைகள்

பெருந்திரன் மருந்து சிகிச்சை (Mass Drug Administration) மருந்து திட்டம்.

## சிக்குன்குனியா காய்ச்சல் (Chikunguniya)

சிக்குன்குனியா காய்ச்சல் என்பது நச்சு 'ஏ' கிருமினால் ஏற்படக்கூடிய நோயாகும்.

## நோய் ஏற்படுத்தும் உயிரினம்

ஏடிஸ் ஏஜிப்டி, ஏடிஸ் அல்போபிக்டஸ் (Aedes Aegypti, Aedes Albopictus) பெண் கொசுக்கள்.

## பரவும் முறைகள்

மனிதனிடமிருந்து மனிதனுக்கு மாசுபட்ட பெண் கொசுக்கள் கடிப்பதால் பரவுகிறது.

## நோய் கிருமி பெருக்கு காலம்

4 முதல் 7 நாட்கள் வரை.

## அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள் (Signs and Symptoms)

- குளிருடன் அதிக காய்ச்சல்
- கை கால்களில் உள்ள மூட்டுகளில் அதிக வலி முதுகு தண்டுவடத்தில் வலி.
- மூட்டு வலி
- பசியின்மை
- கண் வெண்படலத்தில் நோய்த்தொற்று
- காப்பி வண்ண வாந்தி
- மூக்கில் இரத்தப்போக்கு
- மூட்டுவலி, வலி, வீக்கம், விரைப்பு, குறிப்பாக மணிக்கட்டு முதல் கை விரல் வரை, முன் கை, தோள்பட்டை, முட்டி, கணுக்கால், கணுக்கால் மூட்டுகள்.

## நோய்கண்டறிதல் ஆய்வு

ஊனீர் ஆய்வு (Serological), ELISA (என்சைம் தொடர்பு இம்யூனோசார்பன் அசே) ஆய்வு.

## சிக்கல்கள்

- மறதி
- மூளை பிரச்சனைகள்
- சிறுநீரக கோளாறுகள்
- பக்கவாதம்

## கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

1. சுத்தமான தண்ணீரில் ஏடிஸ் எஜிப்டி கொசுக்கள் வளர்வதை தடுக்க வேண்டும்.
2. எல்லா தண்ணீர் பத்திரங்களையும் மூடிவைத்து கொசுக்கள் வளர்வதை தடுக்க வேண்டும்.
3. முட்டை புழுக்களைக் கொல்லும் அபெட் (Abate) கிருமிநாசினியை அதிகம் பயன்படுத்தலாம்.
4. மாலத்தியன், ஸ்மித்தின் (250ml Lartage) அளவு ஏரோசல் தெளிப்பி கொசுக்கள் உற்பத்தியையும் பரவுவதையும் சிறப்பாக தடுக்கிறது.


## சிகிச்சைகள்

- வலி நிவாரணி
- காய்ச்சல் எதிர்ப்பு மருந்து
- திரவங்கள்

## தொற்றுநோய்களை தடுத்தல் (Prevention of Communicable diseases)

தொற்றுநோய்களை சரியான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் தடுக்கலாம்.

1. திட்டமிடல்
2. அடிப்படை மருத்துவ சேவைகளை வழங்குதல்
3. சுத்தமான தண்ணீர் வழங்குதல்
4. சுகாதாரம்
5. குறிப்பிட்ட நோய்களுக்கு அதற்கு எதிராக அனைவருக்கும் தடுப்பூசி வழங்குதல்.
6. போதுமான அளவு உணவு வழங்குதல்.
7. கிருமி கடத்திகளை கட்டுப்படுத்துதல்.
8. குறிப்பிட்ட பாதுகாப்பிற்கு சுகாதாரக் கல்வி அளித்தல் (எ.கா.) நோய் தடைக்கான பலவகையான மருந்துகள் சிகிச்சை (Chemoprophylaxis).




## 11.9 நோய் தொற்றுக்கான தடுப்புகள் (Prevention of communicable diseases)

### ஆதியிலிருந்து தடுப்பு முறைகள் (PRIMORDIAL PREVENTION):

இது ஒரு புதிய கருத்து நாள்பட்ட அல்லது தீவிர நோய்களுக்கு தடுப்பு நடவடிக்கைகளை அளிப்பதில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. முதன்மை தடுப்பு என்பது அவசர மற்றும் வளர்ச்சி அடைந்த ஆபத்து காரணிகளை நாட்டில் உள்ள மக்களுக்கு அணுகாமல் தடுத்தல் வேண்டும் (எ.கா.) அதிக அளவிலான பெரியவர்களின் பிரச்சனைகள் (Adult health problems).

JI3FKZ

### முதன்மை தடுப்பு முறைகள் (Primary Prevention):

1. ஏற்பவர்களின் (நோயுற்றவரின்) எதிர்ப்பு திறனை அதிகரித்தல்.
2. முகவர்களை செயலிழக்கச் செய்தல்.
3. தொற்று சங்கலியை குறுக்கிடுதல்
4. தொற்று பரவுவதை கட்டுப்படுத்துதல்.
5. சுகாதாரக் கல்வி
6. தனிப்பட்ட பாதுகாப்பு (எ.கா.) நோய் தடுப்பூசி மற்றும் பலவகையான மருந்து சிகிச்சைகள் (Chemoprophylaxis).

### இரண்டாம் நிலை தடுப்புமுறைகள் (Secondary Prevention):

ஆரம்ப நிலையிலேயே நோய்களை கண்டறிவது, இலக்கு நடவடிக்கைகளின் சாத்தியமாக உள்ளது (எ.கா) நோயாளியை கண்டறிதல், சுகாதார ஆய்வு, சுகாதாரக் கல்வி.

### மூன்றாம் நிலை தடுப்பு முறைகள் (Tertiary Prevention):

இயலாமையின் முன்னேற்றத்தை வரம்புக்குள்ளாக்குதல்.

குறிப்பிட்ட நோய்களின் அறிகுறிகளுக்கேற்ற சிகிச்சைகளும் மறுமலர்ச்சியையும் கொடுத்தல்.

### கண்காணித்தல் (SURVEILLANCE)

கண்காணிப்பு என்பது தொடர்ந்து திட்டமிட்ட சேகரிப்பு ஆய்வு மற்றும் விளக்கத்திற்கான தகவல்களை முறைப்படுத்தி திட்டமிட்டு செயல் முறைப்படுத்தி மதிப்பீடு செய்யும் பொதுசுகாதார மதிப்பீடாகும்.

### வெடித்து கிளம்புவதை கட்டுப்படுத்துதல் (OUTBREAK CONTROL)

வெடித்து கிளம்புதல் என்பது வழக்கத்திற்கு மாறாக எதிர்பாராத இடங்கள் மற்றும் நேரத்தில் பெரிய எண்ணிக்கையிலான நோயாளிகளை உருவாக்கும் நிகழ்வு ஆகும். ஆரம்ப நிலை நோய் கண்டறிதலும் தடுப்பு முறைகளும் அறிவுறுத்தப்படுகிறது.



Unit_11_Communicable_disease_Gen_Nur.indd 283 09-03-2020 15:53:01

## வெடித்து கிளம்பும் தொற்றுநோய்க்கான முன் ஆயத்தங்கள்

- தயாரிப்பு
- கண்டறிதல்
- எதிர்ச்செயல்
- மதிப்பீடு

## வெடித்துக் கிளம்பும் நோய்களின் தயாரிப்புகள்

- சுகாதார ஒருங்கிணைப்பு கூட்டங்கள்
- வலுவான கண்காணிப்பு அமைப்பு
- ஒவ்வொரு நோய்க்குரிய எதிர்ச்செயல் விழிப்புணர்வு திட்டம்.
- இரத்த நாளத்தின் திரவங்கள் (IV Fluids) நோய் எதிர்ப்பொருள் மருந்துகள் (Antibiotics) தடுப்பூசிகள் போன்ற மருந்துகளை கையிருப்பு வைத்திருத்தல்.
- தனிப்பட்ட வார்டுகளுக்கு திட்டம்
- ஆய்வகத்தின் ஆதரவு

## வெடித்துக் கிளம்பும் நோய்களை கண்டறிதல்

- ஆண்டுதோறும் தோன்றக் கூடிய நோய்களின் ஆரம்ப எச்சரிக்கை முறையை கண்காணிப்பு அமைப்பின் மூலம் கண்டறிதல்.
- வெடித்துக் கிளம்பும் குறிப்பிட்ட நோய்களை சுகாதார அமைச்சகம் மற்றும் உலக சுகாதார நிறுவனத்திற்கு அறிவித்தல்.
- ஆய்வக உறுதிப்படுத்துலுக்கு பொருத்தமான மாதிரிகளை சேகரித்தல்.
- நோயாளிகளின் வாராந்திர அறிக்கைகளும் இவற்றில் அடங்கும்.

## மதிப்பீடுகள்

- கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் செயல்திறனை மதிப்பிடுதல்.
- நிறத்திற்கேற்றாற்போல் வெடித்துக்கிளம்பும் நோய்களை கண்டறிந்து அதன் பதில்களை மதிப்பிடுதல்.
- தேவை ஏற்படும்போது சுகாதார கொள்கையை மாற்றிக் கொள்ளலாம்.
- வெடித்துக்கிளம்பும் நோய்கள் பரவலுக்கான அறிக்கையை எழுதுதல்.
- உலகளாவிய நோய் ஒழிப்பு முயற்சிகள்.
- உலகளாவிய நோய் ஒழிப்பு திட்ட இலக்கை அடையும் முறைகள்
- நோய் தடைகாப்பு மற்றும் தடுப்பூசி
- மருத்துவ சிகிச்சைகள்
- சமூக பயிற்சி
- சுகாதாரக் கல்வி
- தேசிய நோய் கண்காணிப்பு முயற்சிகள்

## செவிலியர்கள் பங்கு (NURSES ROLE)

தொற்று நோய்க்கான ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு சமூக சுகாதார செவிலியர்கள் பங்கு முக்கியமாகும். தொற்றுநோய் கட்டுப்பாட்டிற்கு சம்பந்தப்பட்டவர்களாக செவிலியர்கள் உள்ளனர்.

1. பலவீனமான பகுதியை அடையாளம் காணுதல்.
2. தொற்று நோய்க்கான காரணங்களையும் தொற்றுநோய் தேக்கங்களையும் கண்டுபிடித்தல்.
3. தொற்று நோய்கள் பரவுவதை ஊக்குவிக்கும் சுற்றுச் சூழல் காரணிகளை அடையாளம் காணுதல்.
4. பலவீனமான சமுதாய உறுப்பினர்கள் மற்றும் குறிப்பிட்ட குழுக்களை அடையாளம் கண்டு அவர்களுக்கான சிகிச்சை முறைகளை கண்டுபிடித்தல்.

சமுதாய சுகாதார செவிலியர்கள் பொதுசுகாதார பணியாளர்களுடன் இணைந்து நோய் தடைகாப்பு (Immunization) ஏற்படுத்துவதற்கும், சமுதாய நோய் தோற்று கொள்கைகளை மேம்படுத்துவதற்கும் தேவையான சேவை புரிய ஒத்துழைக்க வேண்டும்.

## பாடச்சுருக்கம்

1. **நீரினால் பரவும் முக்கியமான நோய்கள்:** டைபாய்டு காய்ச்சல், காலரா, மஞ்சள் காமாலை, வகை 'ஏ' மற்றும் கடுமையான வயிற்றுப்போக்கு, டைபாய்டு காய்ச்சல் நோய் Salmonella Typhi என்ற கிருமினால் ஏற்படுகிறது. இது மலம் மற்றும் வாய் வழி மூலமாக பரவுகிறது. டைபாய்டு காய்ச்சலின் சிக்கல்களில் குடல் துளை ஒன்றாகும்.

2. **காலரா:** இது கடுமையான நோய் தொற்று ஆகும். இது விப்ரியோ காலரே என்ற நுண்மத்தால் ஏற்பட்டு வாய்வழி மற்றும் மலம் மூலமாக பரவுகிறது. காலரா என்பது கவனிக்கத்தக்க கொடிய நோயாகும். இதை அடையாளம் கண்டு சிகிச்சை அளிக்கவில்லை எனில் திடீர் மரணம் ஏற்படும்.

3. **மஞ்சள் காமாலை:** இது முதலில் கல்லீரலைப் பாதிக்கும். ஒரு ஒழுங்குமுறை கோளாறாகும். நோயை ஏற்படுத்தும் உயிரினம் மஞ்சள்காமாலை நச்சு நுண்மம் 'ஏ' வகை (Hepatitis 'A' Virus). இது மலம் முதல் வாய்வழி மற்றும் நேரடி தொடர்பு மூலமாக பரவுகிறது. நோய் நுண்மம் பெருக்கு காலம் 15 முதல் 50 நாட்கள் வரை. வழக்கமாக 28 நாட்களாகும்.

4. **கடுமையான வயிற்றுப்போக்கு நோய்கள்:** இது ஒரு கடுமையான அல்லது நாள்பட்ட குடல் தொந்தரவு. இதற்கான பண்பு, 24 மணி நேரத்தில் மூன்று முறைக்கு மேல் மலம் கழிப்பதும். நீர் வெளியேறும் நிலையை பராமரிக்க வாய்வழி நீரேற்றம் பானங்களின் சிகிச்சை (Oral Rehydration Therapy) மிக முக்கிய விஷயமாக உள்ளது.

5. **இளம்பிள்ளை வாதம்:** இது ஒரு போலியோ நச்சு கிருமினால் ஏற்படும் கடுமையான நச்சு நுண்ம நோயாகும். இதனை முடக்கு நோய் என்று அழைக்கலாம். நோயை ஏற்படுத்தும் உயிரினமாக மூன்றுவகை போலியோ வைரஸ் வகை I, II, III உள்ளது. இது சளி துகள்கள் மூலமும் மலம் மற்றும் வாய் வழி மூலமாகவும் பரவுகிறது.

6. **உணவு விஷம்:** மாசுபட்ட உயிருடன் உள்ள நுண்மங்கள் மற்றும் நச்சுக்கள் அல்லது வேதியியல் மாற்றமான உணவுகளை உட்கொள்வதால் ஏற்படும். இது ஒரு கடுமையான இரைப்பை மற்றும் குடல் நோய் தொற்றாகும்.

7. நோய்கள் ஒட்டுண்ணிகளான அன்சைலோஸ்டோமியாசிஸ் (Ancylostomiasis), டானியா சோலியம் (Taenia Solium), டானியா சகினிடா (Taenia Saginata), அஸ்காரியாசிஸ் (Ascariasis).

8. **அமீபியாசிஸ் (Amoebiasis):** இது மனிதனின் இரப்பை மற்றும் குடல் பகுதியில் ஏற்படும். பொதுவான நோய் தொற்று ஆகும். இது என்டமீபா ஹிஸ்டோலிடிக் (Entamoeba Histolytica) என்ற கிருமினால் ஏற்படுகிறது.

9. **கொக்கிப்புழு தொற்று:** இது சிறுகுடலின் நாள்பட்ட தொற்று ஆகும். அன்சைலோஸ்டோமா டியோடினல், நெக்காடர் அமெரிக்கேனஸ் (Ancylostoma Duodenale, Necator Americanus) எனும் உயிரினம் இந்நோயை ஏற்படுத்துகிறது.

10. **அஸ்காரியாசிஸ் (Ascariasis):** மனிதனுக்கு பொதுவாக ஏற்படக்கூடிய ஒட்டுண்ணி புழு நோயாகும்.

11. **நாடா புழு தொற்று மற்றும் டினியான்சிஸ் :** குழுக்களான நாடாப்புழுக்களை ஏற்படும் முக்கிய விலங்கு ஆகும்.

12. எல்லா நோய்களும் வாய்வழி மற்றும் மலத்தின் மூலமாக பரவும் நோயாகும். ஒட்டுண்ணியால் ஏற்படுத்தப்படுகிறது. சரியான சுகாதார முறை, தன்சுத்தம், மேம்படுத்துதல் மேலும் தடுப்பூசிகள் மூலம் கட்டுப்படுத்தவும் தடுக்கவும் முடியும்.

13. **சின்னம்மை அல்லது வெரிசெல்லா:** வெரிசெல்லா ஜிஸ்டா' என்ற நச்சு நுண்மங்களால் ஏற்படும் மிகக் கடுமையான நோய்த்தொற்று ஆகும். இவற்றின் பண்புகள் கொப்புள நிறம் மாற்றத்துடன் சேர்ந்து காய்ச்சல் மற்றும் உடல் சோர்வு ஏற்படும்.

14. **பரோடிட் சுரப்பி (Parotid Gland):** வீக்கம் புட்டாலம்மையின் முதல் அறிகுறியாகும்.

15. **இன்புளுயன்சா நோய்** தொற்று மனிதரிடமிருந்து மனிதனுக்கு இருமல் தும்மல் மற்றும் பேசும்போது சளி துகள்கள் மூலமாக பரவுகிறது.

16. **தொண்டை அடைப்பான்** சளி துகள்கள் மூலமாக பரவும் முக்கிய நோய் தொற்றாகும். பொருட்கள் (கிண்ணம், தெர்மாமீட்டர், விளையாட்டு பொருட்கள், பென்சில்கள்) மூலமாக பரவுகிறது.

17. **மெனின்கோக்கல்** (Meningio coccal) மூளைக்காய்ச்சல் என்பது தொற்று நோயாகும். இது மெனின்ஜெஸ்டீஸ் என்ற கிருமினால் ஏற்படுகிறது.

18. கடுமையான **சுவாச நோய்** மூக்கு முதல் காற்று சிற்றறை (Alveoli) வரை சுவாசப்பாதையில் சிவந்த வலியுடன் கூடிய வீக்கத்தை ஏற்படுத்துகிறது.

19. **ரூபெல்லா** என்ற வார்த்தைக்கு சிவப்பு புள்ளி என்று பெயர்.

20. **காசநோய்க்கு** தற்போது மூன்று முக்கிய ஆய்வுகள் பயன்படுத்தப்படுகின்றன. தோலுக்கடியில் தோல் ஆய்வு (Mantoux Test) காசநோய் விலங்குகளை பாதிக்கும் போது அது பொவைன் காச நோய் (Bovine Tuberclosis) எனப்படுகிறது.

21. **பன்றிக்காய்ச்சல் நோய்:** Influenza நச்சு கிருமினால் ஏற்படுகிறது.

22. **மலேரியா** என்பது ஒரு நுண்ணிய ஓரணு (Protozoa) நோய். இந்நோய் (Genus Plasmodium) ஜினஸ் பிளாஸ்மோடியம் என்ற ஒட்டுண்ணியால் நோயுற்ற மனிதனிடமிருந்து மற்றவர்களை கடிப்பதன் மூலம் பரவுகிறது.

23. **யானைக்கால் நோய்** என்ற வுச்சரியா பேன்கிராப்டி (Wuchereria Bancrofti) கிருமினால் ஏற்படுகிறது. நிணநீர் வீக்கத்தின் மேலாண்மையின் பாதிக்கப்பட்ட கால்களை கழுவி உலர்த்த வேண்டும் மற்றும் கால்களை உயர்த்தி வைக்கவும் பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

24. **டெங்கு காய்ச்சல்** என்பது எலும்பு முறிவு காய்ச்சல் எனப்படுகிறது.

25. **சிக்கன்குனியா காய்ச்சல்** நச்சு நுண்மம் 'ஏ' வகையால் உருவாகிறது. இது ஏடிஸ், குலக்ஸ் மற்றும் மேன் சோனியா என்ற கொசு மூலம் பரவுகிறது. நோய் நுண்மம் பெருக்கு காலம் 4 முதல் 7 நாட்கள் வரையாகும்.



Unit_11_Communicable_disease_Gen_Nur.indd 286 09-03-2020 15:53:01

## மதிப்பீடு

### I. சிறந்த பதிலை தேர்ந்தெடுக்கவும்

1. டைபாய்டு காய்ச்சலை ஏற்படுத்தும் நுண்மம்

அ) சால்மோனல்லா டைப்பி

ஆ) அச்செரிரியா பான்நுரோப்பி

இ) வொர்செல்லா சோஸ்டர்

ஈ) மைக்கோ பாக்டீரியம் டியூபர்கள்

2. டைபாய்டு காய்ச்சல் என்பது

அ) நுண்மக் கடத்தி மூலம் பரவும் நோய்

ஆ) நீர் மூலம் பரவும் நோய்

இ) காற்று மூலம் பரவும் நோய்

ஈ) விலங்குகள் மூலம் பரவும் நோய்

3. காலரா நோய் எதன் மூலம் பரவுகிறது

அ) மலம் மற்றும் வாய்வழியாக பரவுகிறது

ஆ) சளி துகள்கள் மூலம் பரவுகிறது

இ) நோய்த் தொற்று உள்ளவர்களின் நேரடி தொடர்பு மூலம்

ஈ) இரத்தம் ஏற்றுவதன் மூலம்

4. காலாராவின் நோய் நுண்ம பெருக்கு காலம்

அ) சில மணி நேரம் முதல் 2 மணி வரை

ஆ) சில மணி நேரம் முதல் 5 நாட்கள் வரை

இ) சில மணி நேரம் முதல் 7 நாட்கள் வரை

ஈ) 7 நாட்களுக்கு மேல்

5. உணவு நச்சுக்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

அ) உணவு சுத்திகரிப்பு மற்றும் தன் சுத்தம்

ஆ) நல்ல சுற்றுச்சூழல் சுத்திகரிப்பு

இ) நோய் எதிர்ப்பு மருந்துகள்

ஈ) சாதுவான உணவு

6. சின்னம்மை நோய் ஏற்படுத்தும் நோய் நுண்மம்

அ) ரூபல்லா

ஆ) வொரிசெல்ல – சோஸ்டர்

இ) ஜெர்மன் தட்டம்மை

ஈ) வெரிசெல்லா வைரஸ்

7. ஒரு பொதுவாக பளபளப்பான சிவப்பு நிற தசை தடிப்பு அல்லது வெண் கொப்புள வெடிப்பு எந்த நிலையில் தொடங்குகிறது.

அ) நோய் தொடங்குவதற்கு முன அறிகுறிகள்

ஆ) வெடிப்பு கட்டம்

இ) தட்டமையின் பிந்தைய நிலை

ஈ) முன் வெடிப்பு நிலை

8. புட்டளம்மையின் நோய் நுண்மம் பெருக்கு காலம்

அ) 12 முதல் 25 நாட்கள்

ஆ) 18 முதல் 72 மணி நேரம் வரை

இ) 2 முதல் 6 நாட்கள்

ஈ) 7 முதல் 14 நாட்கள்

9. காசநோய் ஏற்படுத்தும் நுண்மம்

அ) மைக்கோ பாக்டீரியம் லெப்ரே

ஆ) மைக்கோ பாக்டீரியம்

இ) ஆர்.என்.ஏ வைரஸ்

ஈ) Y பெப்டிஸ்

10. டெங்கு காய்ச்சல் நோய் ஏற்படுத்தும நுண்மம்

அ) பிளாஸ்மோடியம் விவாக்ஸ்

ஆ) ஏடில் ஏஜிப்டி

இ) பிளாஸ்மோடியம் ஃபால்ஸிபாரம்

ஈ) ஆடில் அல்போ பிக்டாஸ்

11. யானைக்கால் நோய் பரவும் முறை

அ) நோய்த்தொற்று உள்ள கொசுக்கள் கடிப்பதன் மூலம்

ஆ) |நோய் தொற்று உள்ள விலங்குகள் கடிப்பதன் மூலம்

இ) நோய் தொற்று உள்ள பறவைகள் கடிப்பதன் மூலம்

ஈ) நோய் தொற்று உள்ள ஈக்கள் கடிப்பதன் மூலம்

12. யானைக்கால் நோய் நுண்மம் பெருக்கு காலம்

அ) 1 முதல் 6 மாதங்கள்

ஆ) 6 முதல் 8 மாதங்கள்

இ) 8 முதல் 12 மாதங்கள்

ஈ) 16 முதல் 18 மாதங்கள்



Unit_11_Communicable_disease_Gen_Nur.indd 287 09-03-2020 15:53:01

13. பிளேக் நோய் ஏற்படுத்தும் நுண்மம்
அ) Y பெட்டில்
ஆ) T போலிடம்
இ) விப்ரோ – காலரா
ஈ) C டெட்டனி

14. பிறப்புறுப்பு ஹெர்பில் ஏற்படுத்தும்
அ) ஹெர்பல் சிம்பளக்ஸ் வைரஸ்
ஆ) மஞ்சள் காமாலை 'B' வைரஸ்
இ) ஹியுமன் பேப்பில்லோமா வைரஸ்
ஈ) கேன்டிடா ஆல்பிகம்

15. வைரஸ் பாலியல் நோய்க்கான எடுத்துக்காட்டு
அ) கொனோர்ரியா
ஆ) சிபில்ஸ்
இ) கான்க்ராய்டு
ஈ) பிறப்புறுப்பு ஹியூமன் பேப்பிலோம்மா

16. ஆரம்ப தடுப்பு முறைக்கு கீழ்வருவனவற்றில் எது சேர்கிறது.
அ) ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் மற்றும் குறிப்பிட்ட பாதுகாப்பு
ஆ) ஆரம்பகால் நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை
இ) இயலாமையை குறைத்தல்
ஈ) இவையனைத்தும்

17. நுரையீரல் காசநோயை தடுக்கும் சிறந்த வழி
அ) நோயாளியை தனிமைப்படுத்துதல்
ஆ) நோயாளிக்கு சிகிச்சையளித்தல்
இ) பி.சி.ஜி தடுப்பூசி
ஈ) பலவகையான மருந்துகள் சிகிச்சை

18. காசநோய் சிகிச்சையின் முக்கிய நோக்கம்
அ) கதிரியக்க சிகிச்சை
ஆ) நோய் காரணிகளை கண்டறிதல்
இ) நுண்ணுயிரியல் சிகிச்சை
ஈ) சிக்கல்களை தடுக்க

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. போலியோமைலைட்டில் ஒரு ________ நோய்.
2. மஞ்சள் காமாலை நோய் ________ பாதிக்கும்.
3. ________, ________, ________ கடுமையான வயிற்றுப் போக்கு ஏற்படுத்துகிறது.
4. மலேரியாவின் நோய் நுண்மம் பெருக்கு காலம் ________.
5. குளோரோகுயின் மாத்திரையின் அளவு ________
6. கணுக்கால் மூட்டுவலி ________ காய்ச்சலில் உள்ளது.
7. தொழுநோய் ________ லிருந்து மனிதனுக்கு பரவுகிறது.
8. சின்னம்மை ________ லிருந்து ________ பரவுகிறது.
9. கொப்ளிக்ஸ் புள்ளி ________ மியூகோசலில் தெரிகிறது.
10. இன்புருயன்சா ஒரு கடுமையான ________ நோய்த் தொற்று.
11. தொண்டை அமைப்பான் ________ என அழைக்கப்படுகிறது.
12. ________ வைரஸ் காரணமாக SARS ஏற்படுகிறது.
13. பி.சி.ஜி தடுப்பூசி ________ ஐ தடுக்கிறது.
14. கொனோரியா ________ மூலம் பரவுகிறது.
15. தொழுநோயை ________ என்றும் அழைக்கலாம்.
16. மல்டிபேசிலரி தொழுநோய்க்கான மருந்துகள் ________, ________ மற்றும் ________.
17. வலி, தொடுதல், வெப்பம் முதலியவை கை கால்களின் இழப்பு ________ கார்டினல் அடையாளம்.
18. இரணஜன்னி நோய் நுண்ம்ம் பெருக்கு காலம் ________
19. ஸ்கேபில் ________ மூலம் பரவுகிறது.
20. மூளைக்காய்ச்சல் ________ மூலம் மனிதனுக்கு பரவுகிறது.
21. எலி பிளேவை அழிக்க பயன்படும் பூச்சிக் கொல்லி ________.

## III. சிறுகுறிப்பு வரைக.

1. போலியோமைலைட்டிதல்
2. காசநோய்
3. டெங்கு காய்ச்சல்
4. தொழுநோய்
5. மலேரியா

## IV. சுருக்கமாக எழுதுக.

1. ஒட்டுண்ணிகள் மூலமாக பரவும் நோய்கள்
2. பிறப்புறுப்பின் மூலம் பரவும் நோய்கள்
3. காத்ரோபோட் மூலம் பரவும் நோய்கள்
4. விலங்குகள் மூலம் பரவும் நோய்கள்

## V. விரிவாக எழுதுக.

1. வாய் மற்றும் மலத்தின் மூலம் பரவும் நோய்கள்
2. காற்று மூலம் பரவும் நோய்கள்
3. நேரடி தொடர்பின் மூலம் பரவும் நோய்கள்

## மேற்பார்வை நூல்கள்


1. Handerson Virginia & Gladys., Principles and practices of nursing, 6th edition, Macmillan Publications, New York, 1978.
2. Kszier Dugas, Introduction to patient care, 4th edition, W.N.Sounder' s Coy, Philadelphia, 1983.
3. First and authorized manual of St. Johns Ambulance Association and St. Andrew Ambulance Association.
4. Dirasari G. and Brahmamker, Elements of Pharmacology, Ahemadabad, S.S. Shah Publishers, 1973.
5. Clark Mary Jo Dummer, Community Nursing, Reston Publications Inc., 1984.
6. TNAI, A community health Nursing manual, New Delhi,1989.
7. Park J.E. & Park , Textbook of preventive and socialmedicine, Jabalpur, BB publishers, 1989.
8. Brunner & Siddarth, Textbook of medical and surgicalnursing, J.B. Libbincott. Co., Philadelphia, 2000.
9. Davidson & Maccvdeved, Principle and practice of medicinethe English language book society, London, 1988.
10. Kasthuri Sundar Rao (1995), "An introduction to Community Health Nursing" 1st edition, B.I. Publications Pvt. Ltd., Chennai, India,
11. Park K "Text book of preventive social medicine 20th edition, 2009,
12. M/s. Banarsidas Bhanot Publishers, Jabalpur India.
13. Vijay. E (2004) "Community Medicine", 2nd Edition, Bencon Zen Publishers, Chennai, India, Page No.: E.50-54. 1
14. Brunner and Suddarth (2002), "Text Book of Medical Surgical Nursing", 9th Edition, Lippincott Company, Philadelphia.


WEPAAV